Dom Bowie

VB · No: ~~26~~ 27 10 July 1930

3L

211, M28 KN

M30·3·27

18911

1252

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ஹு ஜூலை மீ 10உ [No. 27.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 521
2. தேவாரமும் வானநூலும் — E. T. சொக்கம்மாள் B. A., L. T. 523
3. மாதவி மாதவம்—பொ. ராமானுஜன் 525
4. நம்மாழ்வார் வைபவம் (1ம் பத்து—7ம் பதிகம்) — K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 527
5. மானத சாத்திரம் (நடத்தை) — T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 530
6. தமிழ்ப்பாடம் (நைடதம்—களன் தூதுப்படலம்) 532
7. கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்) — T. N. சேஷாசலம் B. A., B. L. 534
8. வர்த்தமானம் 539

கலாநிலயம்

SEP 193 189111

வண்டிமாடும் மாட்டுவண்டியும்

2

சோம்பலுக்கும் சாந்திக்குமுள்ள வேறுபாட்டை மறத்தலாகாது. மறந்தக்கால் சென்றவாரம்நாம் செப்பியவை மருட்கை விளைத்துநிற்கும். அவாவியொரு கருமத்தைக் கைக்கொண்டு பின் அதனை ஆற்றுதற்கியன்ற தாளாண்மையில்லாது மெய்வருந்துதற் கஞ்சிச் சும்மாவிருத்தல் சோம்பலாகும். அல்லது, அவா இருந்தும் அதனை நிறைவேற்றுதற்குரிய சாதனங்களைப் பயில்வதற்கு மனமும் உடலும் எளிதில் வணங்காத மடியும் சோம்பலாகலாம். சோம்பேறிகளொருவரும் தங்கள்நிலை சுகமுடைத்தென்றெண்ணி மகிழார். "இன்று கழியட்டும் நாளை—நாளை—நாளை, இதனைச் செய்வோம்" என்று தாமதஞ் செய்துசெய்து தாம் மேற்கொண்ட கருமத்தைக் கெடுத்துவிட்டுப் பிறகு பெருந்துன்பத்திற் காளாக்கிக் கொள்கின்ற புன்மதிப்பேதையர் சோம்பேறிகள். இவர்களுக்கு ஆசை வருவதும் துன்பம்; அதனை நிறைவேற்றத் தலைப்படும்போதும் துன்பம்; தலைப்பட்டு முயலும்போதுந் துன்பம்; முயன்றது ஒன்றும் இவர்களது சோம்பலால் முடியாது போம்போதும் பெருந்துன்பம். இது தாமத குணம். சத்துவகுணத்தின் சாரமாகிய சாந்தியை இதனின்று பிரித்துணரும் புத்தியில்லாச் சிலர், தவசிகளையும் முனிவர்களையும் துறவிகளையும் சாதுக்களையும் சீலமுடைய அந்தணர்களையும், கலையுலகில் களிதுஞ்சும் புலவரையும், சோம்பித்திரியும் இனத்தவருட் சேர்த்துப் பழிக்கப்புகுவது மிகக்கொடியது. "உலகிற்கென் செய்தார் இத்துறவிகள்; விஞ்சிவிஞ்சியுரைத்தாலும் தங்கள் சுகத்தை நாடினார்களல்லது வேறில்லை. புலவர்கள் புரிந்ததெல்லாம் என். பொய்யைப்புனைந்து பெரிதாக்கிப் பயனற்றவைகளில் தங்கள் நினைவைச் செலுத்தி, உலகமுன்னேற்றத்திற் கொன்றுமியற்றாது கெடுத்தொழிந்தனர்" என்பார் குறைந்த கல்வியும் நிறைந்த தருக்கு முடையவர் பலர். தம்முடைய அறியாமையின் அளவினை அறியாததால் இவ்வண்ணம் வாய்வந்தன பேசுகின்றாராதலின் இவர் நிலைமை பரிதற்குரியதேயன்றிப் பரிகசித்தற் கொத்ததன்று. "ஐய, மற்று யாது செய்யவேண்டுமென்று கூறுகின்றீர்" என்று குறிப்பிட்டுக் கேட்போமாயின், "முன்னேற்றம்" "விடுதலை" "தியாகம்" என்று வழிவழிப் பயின்றுள சில சொற்றொடர்களை ஆரவாரம் செய்வதல்லால், இருக்கும்நிலை யிது, எய்தவேண்டும் முடிவெது, அதனிற்கேகும் நெறிதான் யாது, எனத் தர்க்கமுறையுடன் ஒரு சொல் இயம்பும் பெற்றியரல்லர். அவ்வாறு இயம்பவேண்டுமென்ற அவசியமும் அவர்களுக்குத் தோன்றுவதில்லை. இயம்பத்தெரியினுந் தெரியாவிடினும் சோம்பலில்லாது உலகத்தின் நன்மைக்காக அன்னவர் செய்வதுதான் யாது? மற்றவர்களைச் சோம்பேறிகளென்று வைதவளவில் தாம் ஆள்வினையுடையவராவது திண்ணமாயின், இவர் ஆள்வினையுடையவர்களே. மற்று, ஆள்வினைக்கடையாளமோ அதுவன்று. சோம்பலினுங் கொடியசோம்பல் செய்வதொன்று மில்லாமலே தம்மைச் சுறுசுறுப்பாளிகள் என்றென்று எண்ணி நிற்கும் நிலை.

சிந்தனைசிறிதுமின்றிச் சிலசொற்களிடையே சுழல்வரும் இவ்வினத்தவர்கிடக்க, சாந்தியைநாடிப் புரிபவர் தன்மையை நோக்குவோம். ஆங்கில கவி டென்னிஸன் பகர்ந்துளவண்ணம், "சாந்தியே யல்லால் வேறோர் சுகமில்லை யில்லை" என்று எடுத்துரைக்கும் தம் உள்ளுணர்விற்கு முழுச்செவி தந்த உத்தமர் இவர். இவ்வுணர்வினது உண்மையை, அறிவால் கல்வியால் கேள்வியால் ஆராய்ச்சியால், இவையனைத்திற்கும் மேம்பட்ட அனுபவத்தால், தெருண்ட மேலவரும் இவரே. சிறிதே அறிவிப்பினும் அதுகொண்டு இவ் வுலகப்போக்கினை உற்றுநோக்கினால், நமக்குப் புறத்திலுள்ள பொருள்களைப் பற்றி முன்னேறுவதென்பதெல்லாம் மாட்டுவண்டி வண்டிமாடாக மாறுவதன்றி வேறொன்று மன்றென்பது புலப்படாமற் போதலருமையே. இதுதெரிந்தால் யாவரும் அவரவர் புறத்துலகத்தில் எங்கிலை எய்தியிருப்பினும் அதனிலேயே அமைதி நாடுவார். இதனிற்கு, "விட்டேனுலகம்" என்று விளம்பவேண்டிய அவசியமில்லை. நமது நாட்டுப் பட்டினத்தடிகள்போலவும் இங்கிலாந்திலிருந்த பைரன் (Byron) என்பவர்போலும், தமக்கு அயலான பொருள்களினின்றும் இன்பம் நாடிநாடி அஃதொன்று மெய்தாமையால் கையற்று நைகின்ற தன்மையைச் சாந்தியைப் பெற்றவொரு தனிப்பெரும் நிலையினோடுசேர்க்கலாகாது. சாந்தியைஎய்திய விழுமியோருள்ளம் எப்பொழுதும் சுகித்திருக்கும். அவாவினை அவித்தவர் அவர் என்பதும் அமையாது. தாம் எய்திய சாந்தியை மற்றவர்களும் எய்தவேண்டும் என்னுமோர் அவா—இது அவா வாகுமெனின் - அவர் கொள்வதும் இயலும். மற்று, மாதர் புதல்வர் தரணி இல்லம் தனம் முதலியவைகளை ஓரோவழி ஆதரித்தகாலத்தும், அத் திண்ணிய பொருள்களுக்குத் தாம் அடிமையாகாமல் நுண்ணிய உணர்வினால் தீதிலா தவைகளைத் துய்க்கவும் துய்ப்பர். இல்லையென் றிரங்காது இருப்பனவற்றை வெறுக்காது எல்லாந் தனக் கியன்றதே என்ற தன்மையில் அகத்துணர்வும் புறப்பொருளும் இகலின்றிப் பொருந்தி இணங்கும்படி சேர்கின்ற செம்மைதான் சாந்திநிலையுற்றார் தாம்.

அற்பப் பொருள்களுக்கெல்லாம் அவாவுகின்றான் இழுதை. அவாவி உழலுங்கால், "இதனை எய்தினும் என்பெற்றாய்; முன்னைநீ விரும்பிய சில வாய்த்தனவல்லவோ? வாய்த்தும் ஏதேனும் உனக்குச் சுகம் சித்தித்ததோ? அதற்கெல்லாம் மாறாக இம்முறைமாத்திரம் நீ வேண்டும் பொருளோடு, விழைந்த இன்பமும் வரும்வரும் என்று எதிர்நோக்கு மிது என்ன மதி" என்றென்று பரிவுடனருகுகின்று அறிவுறுத்தும் உள்ளுணர்வின் மெல்லியகுரல் தன்செவி சேரா வண்ணம் பஞ்சினை அடைத்துக்கொள்ளல் இவ்விழுதையின் தொழில். இதற்கும் உரத்தகுரலில் அவ்வுள்ளுணர்வு ஓலமிடுமாயின், பொய்யுடைய நெஞ்சினர்கள் சிலர் சொல்லித்தந்த புன்மொழிகளைக்கொண்டு அதன்வாயை அடைத்துத் தூர்த்துவிட்டுத் தான் போனபோக்கே தடுமாறலுறுகின்றான். இத்தடுமாற்றத்தினிடையே சலிப்பு வந்தடைதல் சகஜமே. அச்சலிப்பிற் குடைந்தானாயின் அவனைச் சோம்பேறி என்பார் உலகத்தவர். மற்று, அவன் எண்ணிய பொருளை எய்திடக் கண்டாரெனின், 'கெட்டிக்காரன்', "சமர்த்தன்", "முன்னுக்கு வந்தவன்" என்று அவனைப் பாராட்டத் தலைப்படுகின்றனர். முன்னுக்குவரும் வழியில் எத்தனைபேரை இவன் பின்னுக்குத் தள்ளினான் என்பதை நினைப்பதில்லை. முன்னுக்கு வந்ததால் அவன் கண்டபயன் உண்மையாக எவ்வகைத்து எவ்வளவு என்பவைகளைக் கணக்கிடுவதும் இல்லை. சாந்தியடைந்ததோ அவன் சிந்தனை? மூலக்கேள்வி அதுவே யன்றோ! "சாந்தியே யல்லால் வேறோர் சுகமில்லை" என்ற வாக்கியம் பொய்த்ததில்லை; பொய்த்ததென்று உரைப்பாரும் இல்லை. எனின், உள்ளுணர்வு பின்னுக முன்னேறியவர் பெற்றபேறுதான் யாவதாகுமோ! அல்லலே அதிகரித்ததன்றி அமைதியடைந்ததாய் உண்மையில் நினைப்பவர் யாரேனும் உளராயின் அவர்விலாசம் தனக்குத் தெரியப்படுத்தவேண்டுமென்று ஆங்கிலேய வித்தகர் கார்லைல் கேட்கின்றார்.

ஆதலின் ஒன்றைவிட் டொன்றைப்பற்றித் திரிபவர் எவரும் தாம் பெற்றதேனும் பிறரைப் பெறுவித்ததேனும் ஒன்றுமில்லை. ஒன்றுமே இருக்க இயலாதென்பதை உணராததால் மேன்மேலும் வேறுவேறு வகைகளில் முயல்கின்றனர். முனிவரும் புலவர்களும் இவ்வுண்மை தெரிந்தவர். பொய்வேடக்கூத்தில் தாம் புகுந்துநடிக்க மனந்தான் அவர் எங்ஙனங் கொள்வர். மற்றவர் ஆடும் ஆட்டத்தில் கலவாது அயல்சென்று நிற்கின்றாரேனும் அன்போடும் அருளோடும் மயக்கற விளங்குமொரு தூய உள்ளத்தின் ஆர்வத்தோடும், தம் இருகரங்களையும் அளித்து அல்லலெனு மலை நின்று மக்களைச் சாந்தியெனுங் கரை சேர்க்கின்றனர். இவ் வுதவியைத் தெரிந்து செய்பவர் வித்தக முனிவர்; புலவர்களோ பெரும்பாலும் தெரியாமலே செய்துமுடிக்கின்றனர். தெரிந்து செய்யினுந் தெரியாமற் செய்யினும் மேலோர் செய்கையெல்லாம் பிறர்க் குறுதியே பயக்கும். மேலவ ரல்லராயின் இருதிறத்தும் விளைவன இடுக்கண்களே.

கலைநலங் கொழிக்கும் புலமையோர், விலையிலா இவ் வமைதியை மக்களுக் கெவ்வண்ணம் வருவித்தளிக்கின்றன ரென்பதை நம் 'கலாநிலய' வாசகர்களுக்கு அதிகம் இயம்பவேண்டா. விரித்து அதனை நாமிங்கு மீண்டும் வரையப்புகுவோமெனின் கூறியது கூறலாக முடியும். "கலாநிலயம் செய்யுங் கருமமும் செயல்வகையும்" என்று நாம் முதலாண்டின் முதலில் வரைந்த தலையங்கவரிசைக் கட்டுரைகளையும், இரண்டாவதாண்டில் வந்துள "கலைகளே கதி' என்ற தலையங்க வரிசைகளையும் இக்காலம் நினைவிற் கொண்டக்கால் அமைதிச்செல்வத்தைக் கலைஞர்கள் வரையாதளிக்கு மாற்றல் புலப்படும். அத் தலையங்கங்களில் நாம் வகுத்துக் காட்டியவண்ணம் புலவர்கள் தம் கலைப்பொருள்களால் இவ்வுதவியை நேராக நல்குவதுமன்றி, மெய்ஞ்ஞான முனிவர்கள் இத்தொழிலைச் செய்யுங்கால் அவர்களுக்குப் பக்கத்துணையாகவும் நிற்கின்றனர். காவியம் ஓவியம் அனைய கலைகள் உணர்வின் வழியாக அமைதியின்பால் உய்க்குந் திறத்தன. மனிதரைக் கள்ளமில்லா உள்ளத்தவ ராக்குங் கலை. அறிவினால் நம்மை எட்டிப்பிடிக்கின்றனர் முனிவர். சென்றவாரக்கம்பராமாயணக்கட்டுரையில் எம்நண்பர் ஸ்ரீமான் சேஷாசலம் காட்டியபடி, ஒருநாளும் அசையாத உரத்தினை நமது உள்ளம் பெறுவதற்கு அறிவு இன்றியமையாததென்ற துண்மையாயின், கலையினால் பண்பட்ட மக்களுள்ளத்தை அறிவினாற்சான்ற வித்தகர் தம் பொருளுரைகளால் வலியுறுத்தவேண்டுமென்பதும் இன்றியமையாததாகும். முனிவர்கள், குருவரர்களாய் நின்று இப் பேருதவியைச் செய்கின்றனர். துறவிகள் தம் வாழ்க்கைமுறையினால் சாந்தியின் மேன்மையைக் காட்டித்தருகின்றனர். செய்கையானுஞ் சொல்லாலும் முனிவர்கள் அருள்கின்ற மெய்யுதவி இதுவன்றி மோனமாய்நின்று அவர் மனத்தால் புரிகின்ற உதவியும் மிகப்பெரிது. தம் தூயமனத்தை ஒருமுகப் படுத்தி, உலகெலாம் அமைதியில் வைகவேண்டுமேயென எப்பொழுதும் நினைத்தவண்ணமாயிருக்கும்நீர்மையர் அவர். செய்கையையும் சொல்லையும்போல், மற்றவர்களை இயக்குகின்ற ஆற்றல் எண்ணங்களுக்கு முளதென்பது மனத்தின் தத்துவத்தை அறிந்தோர் கண்டுள உண்மைகளி லொன்று. சாந்தி சாந்தி: என்று இவ் விழுமியோர், மக்கள் மாட்டுள்ள உழுவலன்பினால் உன்னியுன்னிக் கிளர்தருமெண்ணங்கள் வீண் போகுமோ.

முன்னொருகாலத்தில் நம் மிந்தியநாடு இன்பமயமாய் அமைதியில் துயின்றிருந்ததெல்லாம் கலைஞானமும் ஞானக்கலையும் பொலிந்துவிளங்கிய மேன்மையா லென்பதை யயர்ந்துவிட்ட இக்கால மக்கள்கதியென்னும்! வாசாகைங்கரியமாக அவைகளைப்பாராட்டிப் பேசுவதோடு தம் கடமை தீர்ந்ததென்றெண்ணி அதற்கு முற்றிலுமே மாறான வழிகளைப் பின்பற்றுவார் சிலர். பழையனவென்று அவைகளைக் கூசாது பழித்துவிட்டு, மாட்டுவண்டியை வண்டிமாடாக மாற்றுகின்ற புதுமையைப் புகுத்திவருமிக் கொள்கையே இடையூறின்றிப் பாவிப் பெருகுவதைக் காணக்காணக் கலங்காநெஞ்சங் கல்லன்றோ!

தேவாரமும் வான நூலும்

[504-வது பக்கத் தொடர்ச்சி]

(iii) பஞ்சங்களின் காரணமும், அவற்றை வானநூல் வல்லோர் தமிழகத்தில் தடுத்த வகையும்

பஞ்சங்கள் உலகில் நேர்வதற்குக் காரணங்கள் பலவுள. நமதுநாடு பஞ்சத்தால் வருந்துங்கால் அண்டையநாடு செழித்துவிளங்கலாகும். அத்தகைய பஞ்சங்களுக்குப் பெரும்பாலும் மனிதரே காரணமாம். உலகனைத்தையும் வருத்தும் பஞ்சமோ, வானத்தில் எதிர்பாராத சம்பவங்களின் காரியம். உலகத்தில் மாந்தர் செய்யும் துர்க்காரியங்களால் கொள்ளைநோய் முதலியன வருவதுபோல, கோளங்கள் முறையே செப்பிய பயனைத் தாராதொழியத் தூமகேதுக்கள், எரிநட்சத்திரங்கள் முதலியவை நேர்வதால் கோளஆட்சி பிறழ்ந்து காலமழை பெய்யா தொழிவதும் உண்டு. இதுவே பிரபஞ்சத்தின் பஞ்சமாகும். இவ்வகைய பஞ்சங்கள் நேராதாதென்ற வெண்ணங்கொண்டும், கார்காலத்திற் கிளம்பும் மேகங்கள் மழைபெய்யாது கலைந்துபோகக் கூடுமென்ற அஞ்சியும், காலமழை சற்றுப் பிறழக்கண்ட நம்முன்னோர்யாகங்கள்செய்யத் தொடங்குவார். இவ்வாறு யாகப்பிரயத்தனங்களைத் தொடங்கி முபனுமிடத்து, முழுமுதற்கடவுளையும் மற்றதேவர்களையும் ஒருதன்மைய மனத்துடன் வழிபாடுசெய்து பலியிடின், அவர் தம் சக்தியால் மழை பெய்விப்ப ரென்பது வைதிகமுறையில் எழுந்த நம்பகமாம். இதன்றியும் இயற்கைத்தத்துவ நிலையில் அறிவியற் கல்விக்குப் பொருந்துமாறும், உலகவிபத்தைத் தடுக்குநிமித்தமாயும் நம் முன்னோர் யாகங்கள் நிறைவேற்றியதைத் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், திரு ஓமமாம்புலியூர் முதலிய தலங்களிற் பாடிய பதிகங்களில் நாம் காணலாம்.

> சம்பரற் கருளிச் சலந்தரன் வீயத்
> தழலுமிழ் சக்கரம் படைத்த
> எம்பெரு மானார் இமையவர் ஏத்த
> இனிதினங் குறைவிடம் வினவில்
> அம்பர மாகி அழலுமிழ் புகையின்
> ஆகுதி யால்மழை பொழியும்
> உம்பர்க ளேத்தும் ஓமமாம் புலியூ
> ருடையவர் வடதளி யதுவே.

எனச் சம்பந்தரும்,

> ஆதியான் அரியயனென் றறிய வொண்ணா
> வமரர்தொழுங் கழலானை யமலன் றன்னைச்
> சோதிமதி கலைதொலைந்த தக்க னெச்சன்
> சுடரிரவி யயிலெயிறு தொலைவித் தானை
> ஓதிமிக வந்தணர்க ளெரிமூன் றோம்பும்
> உயர்புகழார் தருமோமாம் புலியூர் மன்னும்
> தீதில்திரு வடதளியெஞ் செல்வன் றன்னைச்
> சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே

என்று அப்பரும் முறையே மொழிவன காண்க.

வானத்தில் வளரும் முகிலானது கருகிப் பொழிவதற்கு மூலப்பொடிகளான தூசு அவசியம். ஆயினும் நாலைந்து மைலுக்கு மேலுள்ள மேகங்களுக்குத் தூசு கிடைப்பதரிது. முறைப்படி செய்யும் யாகத்தின் ஆகுதிப்புகையானது வெகு வேகமாய் மேலே வானத்திற் செல்வதால் மேகத்தைத் தாக்கியவுடன் சற்றுக் குளிர்ச்சிச் சம்பந்தத்தால் மழைபெய்விப்பது திண்ணம். இவ் வியற்கைத்தத்துவத்தை யறிந்து நம் முன்னோர் வைதீகநடையில் இவ்வறிவினைப் பயன்படுத்திக் காலமழை பெய்வித்தனர். இதற்கு அரசாங்க உதவியு மிருந்தது.

> மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
> தவமிலா ரில்வழி யில்லை தவமும்
> அரசிலா ரில்வழி யில்லை யரசரும்
> இல்வாழ்வா ரில்வழி யில்.

ஆறிலொரு கடமைவாங்கிய தமிழரசர்கள் தாம் சேமித்த பொருளிற் சில தவத்தோருக்கு அளித்து, அவர் செய்யும் ஓமங்களால் ஆகுதிப்புகை யெழுப்பிக் காலமழை பெய்வித்தனர். இதற்கு அத்தாட்சிகள் பலஉள: வேள்விசெய்விப்பதற்கென்றே ஏற்பட்டவூர் வேள்விகுடி யாகும். இங்குக் கலிகாலத்திற்கு முன்னரே தமிழரசர் மான்யம்விட்டதும், கலியாலத் தருமம் மெலிந்ததும் "கற்றுந் தெரியோம்பிக் கலியை

"வாராதுசெற்ற" பிற்காலமன்னர் அத்தருமத்தை நிலைநிறுத்தியதும் வேள்விகுடி சாசனத்தா லறியலாம். அக்காலஅந்தணர் வானநூல் நிபுணராய்க்காலமறிந்து வேள்விசெய்து உலகத்தை உய்வித்ததால், அந்தணருக்கும், பசுக்களுக்கும், தேவர்களுக்கும், வேந்தனுக்கு முள்ள சம்பந்தத்தைப் புகலிவேந்தன் பாண்டியன் கூன்நிமிர்த்திய திருப்பாசுரத்திற் குறிப்பது காண்க:-

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெ லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீரவே.

தமிழராம் அந்தணர் வானவர் ஆனினம் தண்புனலின்வீழ்ச்சி வேந்தன் இவற்றின் ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தமும், அவற்றின் ஒற்றுமையால் தீயவெலாமொழிந்து சிவபெருமான் திருநாமம் சூழ்ந்து, வையகம் ஆநந்தமயமாய் விளங்கும் தன்மையையும், நமக்கு இப்பாசுரம் நினைப்பூட்டுமன்றோ!

(iv) இருசுடர் நட்சத்திரச் சேர்க்கையும், அவை காட்டும் தேவார சந்தர்ப்பங்களும்.

முன்னே கூறியவாறு பன்னிரண்டு இராசிகளுக்கிடையே, ஒருமுறை பிரவேசித்து மீள, சூரியனுக்குச் சற்றேறக்குறைய 365 நாள் 5-மணி நேரம் 48¼ நிமிஷம் ஆகின்றது. இது ஒருவருடமாகும். ஒவ்வொரு வருடத்திலும் சூரியப்பிரவேசம் (நட்சத்திரம் அல்லது இராசிக்கு) உலகத்திற்கு ஓரேவிதமான பயன், (கோளங்களில் அசந்தர்ப்பங்கள் நேராவிடின்) தவறுமல் கொடுக்கும். உதாரணம்:—தேதிமழை, அதாவது ஆனி 10, ஆடி 8, ஆவணி 6, புரட்டாசி 4, ஐப்பசி 2, கார்த்திகை 1, இந்தத் தேதிகளில் மழை பெய்யவேண்டும். தவறினல் அது பஞ்சத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாம்.

சந்திரனனவன் ஒருமுறை மேற்கண்ட இராசிகளில் அமைந்த நட்சத்திரக்கூட்டங்களிற் பிரவேசித்துமீள 27 நாள் 7 மணி 43¼ நிமிஷங்களாகின்றது. இன்று என்ன நட்சத்திரம் என்பதை நாம் அறிய வேண்டுமானல், பஞ்சாங்கத்தைப் பாராமலே எந்த நட்சத்திரத்தினருகில் சந்திரன் காணப்படுகிறதோ, அதுதான் இன்றைய நட்சத்திரமென நாம் துணிந்து மொழியலாகும். சூரியனைக்காட்டிலுஞ் சந்திரனே மிகவும் சிறியது ; சக்தியுமற்றதென்று யாவரு மறிந்ததே. ஆகையால் சந்திரன் நட்சத்திரராசிகளிற் பிரவேசிக்கும்போது முறைப்படி உண்டாகவேண்டியதென விதித்துள பலன், பல்லாயிர அசந்தர்ப்பங்களுக்கு உட்பட்டதாய்ப் பெரும்பாலும் குறித்தவாறு விளைவதில்லை. உதாரணம்:-பரணியில் நோய்கொண்டு படுத்தவன் மரணமடைவானென்பது சாஸ்திரம். அநுபவத்தில் பெரும்பாலும் நடப்பதில்லை. ஆயினும் சாஸ்திரவிதி பொய்யன்று.

ஞாயிறும் திங்களும் நீங்கலாக ஏனைய ஏழுகிரகங்களில் இராகுகேதுக்கள் சாயாக்கிரகங்கள். அதாவது, இவை ஒருவகை நிழல்கள்; தமக்கென ஓர் உருவமும் பெறுதனவாதலால், இவை தனியே யாதும்செய்யா. எஞ்சிய ஐந்து கிரகங்களில், செவ்வாயும் வியாழமும் மேற்கண்ட பன்னிரண்டு இராசிகளிற் பிரவேசிக்குங் காலங்களில், துன்பம் பெரும்பாலும் விளைவிப்பதில்லை. இதற்குச் சோதிடர் கூறும் காரணம் பின் வருமாறு. அங்காரகன் பூகாரகனுதலால் அவன் பூமிக்கு இன்னல் செய்யானென்றும், வியாழம் தேவகுருவாதலால் தீங்குவிளைவிக்கும் குணம் அவனுக்கில்லையென்றும் மொழிவர். இந்தவுண்மையை ஒருவாறு ஆமோதிப்பது போல், திருஞானசம்பந்தரும்,

சனிபுதன் ஞாயிறு வெள்ளி திங்கட் பலதீயன
முனிவது செய்துகந் தானைவென்றவ் வினைமூடிட
இனியருள் நல்கிடென் றண்ணல்செய்த விராமேச்
பனிமதி சூடிநின் றுடவல்ல பரமேட்டியே. [சுரம்

என வைந்து கிரகங்களையும் அவற்றுள் சனியைமுதலாகவும் எடுத்துக்காட்டினர். இதனல் இவைதாம் என்றும் துஷ்டகிரகங்களென்றும், நன்மை பயவாதன வென்றும் எண்ணலாகாது. இவை சிவனடியாரல்லாதாருக்கே இன்னல் விளைவிக்குமன்றிச் சிவபெருமான் திருவடித்தியானத்திலுள்ள சன்மார்க்கர்களை யாதும் செய்யா. கோளறு திருப்பதிகத்தின் முதற்பாசுரங் காண்க:—

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனல் [வெள்ளி
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன் வியாழம்
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே

என்றனர் புகலித் தமிழ்விரகர்.

மேற்கண்ட கிரகங்கள் சில இராசிகளிற் பிரவேசிக்கும் காலங்களில், மனிதரால் நீக்கமுடியாத துன்பங்கள் நேரக்கூடு மாதலானும், சீவகாருண்யத் தன்மையாலும், தமிழ்நாட்டில் வசித்த சீரியோர் பொருள் சேமித்து எளியோர்களைக் காத்தல் நமது முன்னோர் வள்ளன்மையாயிருந்தது. இதையே ஆளுடையபிள்ளையாரும் கழுமலச்சிறப்பிற் காட்டுகின்றார்:—

அலங்கல்மலி வானவருந் தானவரு
மலைகடலைக் கடையப் பூதம்
கலங்கவெழு கடுவிடமுண் டிருண்டமணி
கண்டத்தோன் கருதுங் கோயில்
விலங்கலமர் புயல்மறந்து மீன்சனிபுக்
கூன்சலிக்குங் காலந் தானுங்
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழும லமே

எனச் சனி மீனராசியில் புகுங்காற் செய்யுங் கொடுமையை விளக்குகின்றனர். காலமழை பெய்யாது வருந்துங்காலையில், மீனராசியிற் சனி பிரவேசிக்குமாயின் அது உலகத்திற்கு மிகக் கொடூர வாதைகளை உண்டாக்கும். இத்தகைய காலக்கொடுமையைப் பிரத்தியட்சத்திற் கண்டோ திருநாவுக்கரசுநாயனுரும்,

வானந் துளங்கிலென்? மண்கம்ப
மாகிலென்? மால்வரையுந்
தானந் துளங்கித் தலைதடு
மாறிலென்? தண்கடலும்
மீனம் படிலென்? விரிசுடர்
வீழிலென்? வேலைநஞ்சுண்
டேனமொன் றில்லா வொருவனுக்
காட்பட்ட வுத்தமர்க்கே!

என்றார். சம்பந்தர்காலத்தில் சிலவருடங்களில்கொடிய பஞ்சங்கள் நேர்ந்து,

கன்னெடுங் காலம் வெதும்பிக்
கடனீர் சுருங்கிப்
பன்னெடுங் கால மழைதான்
மறுக்கினும் பஞ்சமுண்டென்
றென்னெடுஞ் சூளறு மஞ்சனெஞ்
சேயிமை யாதமுக்கண்
பொன்னெடுங் குன்றமொன் றுண்டுகண்
டீர்ப் புகலிடத்தே

என்றுதுணிந்து திருநாவுக்கரசும் ஞானக்கன்றும் திருவீழிமிழலையுள் நித்தம் படிக்காசுபெற்று அடியார்களைப் போஷித்தவிஷயம் சேக்கிழார் திருவாக்காலறிகின்றோம். இதன்றியும் சுந்தரரும்,

நேசமுடை யடியவர்கள் வருந்தாமை யருந்த
நிறைமறையோ ருறைவீழி மிழலைதனி னித்தல்
காசருளிச் செய்தீரின் றெனக்கருள வேண்டும்
கடனுகைக் காரோண மேவியிருந் தீரே

என்பர். நட்சத்திரராசிகளில் சனி முதலியகிரகங்கள் புகுந்து உண்டாகும் கொடுமை சுந்தரர் தேவாரத்திலும் காணலாம்:—

மகத்திற் புக்கதோர் சனியெனக் கானுய்,
மைந்தனே மணியே மணவாளா!
அகத்திற் பெண்டுகள் நானென்று சொன்னல்
"அழையேல் போகுருடா" வெனத்தரியேன்
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்வேன்
முக்கணு! முறையோ! மறையோ தீ
உகைக்குந் தண்கட லோதம்வந் துலவும்
ஒற்றி யூரெனு மூருறை வோனே!

மகம் என்னும் நட்சத்திரக் கூட்டம் சிங்கராசியின் தலையாகும். அரிமா நோக்கென வுலகவழக்கிற் கூறப்படும் சிங்கத்தலைப்பில் சனி புகுவானுயின், ஆவ்தற்குமின்றி அழிதவற்குமின்றிப் பெருங்கலகமும் குழப்பமும் உண்டாகுமென்பது நம் முன்னோர் துணிபு. இவ்வாறு கோளசம்பவங்களால் பெருந் துன்பங்கள் நேருமென்பதை இராவணனுமறிந்து முனிந்தானென்பது அப்பர் தேவாரத்திலும் காணலாம்.

சனியும் வெள்ளியுந் திங்களு ஞாயிறும்
முனிவ னுய்முடி பத்துடை யான்றனைக்
கனிய வூன்றிய காரண மென்கொலோ?
இனிய னய்நின்ற வின்னம்ப ரீசனே!

அப்பர் (திருவின்னம்பர் - திருக்குறுந்தொகை)

மாதவி மாதவம்

[506-வது பக்கத் தொடர்ச்சி.]

3. விண்ணவர் கோமான் விழா.

வையக முழுதும்போர்த்த மையிருளோடு மற்றத்தையலார் விரகநோயும் மதனன்றன் திறலும் பாற வெய்யவன் குணபால் தோன்றிச் செங்கதிர் ஒச்சினின் பொழுது றன். மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் புலரல் என்னும் இரண்டிற்குமிடையே கொடிப்போர் கொள்வோ ரோதை யிடையறுக் கடைகள் நிறைந்துள்ளன. அப் பரந்த நிலத்திற்கு "நாளங்காடி" [காலைக் கடைத்தெரு] எனப் பெயர். முன்னொருகாலத்து அந்நகர்மன்னன் முசுகுந்தனென்பான் இந்திரனுக்குச் செய்தவோர் பேருதவியின்பொருட்டு, அவ்விண்ணவர்கோமான் புகார்நகரிற்கு எவ்வகை யிடுக்கணும் உறுவகைக் காத்திடென் றேவிய பூதமொன்று அவ்விடத்தே "நாளங்காடிப் பூதம்" என்னும் பெயரோ டுளது. அதன் பலிபீடிகையில் சித்திரைமாதத்து முழுக்கலா மதிவிளங்கும் நன்னளிலே, மறக்குடிமகளிர், அவரை துவரை முதலிய புழுக்கலையும், எள்ளுருண்டையும், நிணச்சோறும் கள்ளும் வைத்துப் பூவும் புகையும் மிகத் தூவி, கையிரண்டையு முடக்கிக் கோணிய நடையொடும், ஒருவரோடொருவர் கைகளைக் கோத்துக்கொண்டும் ஆவேசம்பெற்று ஆடி, "எம்பெரு மன்னன் இருநிலமுழுதும், பசியும் பிணியும் பகையும் நீங்குக, வசியும் வளனும் சுரக்க" என வாழ்த்திச் சென்றார். மறங்கொள் மாக்கள் பல்வேறுபடையொடு அப் பலிபீடம் போந்து "எம் வேந்தன் கொற்றங்கொள்க" எனக் கண்டாரை யச்சுறுத்துங் கடுநோக்குடைய தமது தலையை அப் பலிபீடத்தே அரிந்துவைத்துப் பலியூட்டினர். நீண்ட பலிபீடத்தி லரிந்துவைத்த வங்நெடுங்குஞ்சித் தலையைத் தன் இனமென்றெண்ணி, "ஆண்டலைப்புள் ளருகணைந்து பார்க்கு மாலோ, அணைதலு மச்சிர மச்ச முறுத்துமாலோ"

முன்னே புகாரினை யாண்ட கரிகால்வளவனெடு பொருதுதோற்ற வேற்றுநாட் டரசர் திறையாகப் புகார்நகரின் கொடுத்ததும் மயனல் நிருமிக்கப்பட்ட புதுமைகள் மாண்புவாய்ந்ததுமான முத்தின் பந்தர், கல்விமண்டபம், தோரணவாயில் ஆகிய இவைகளிலும் அளவு நிறை யாகியவற்றின் இலக்கங்களும், இன்னருடையதெனப் பெயரும் எழுதி, இலச்சினை [முத்திரை]யிட்டபொதிகள்எவ்வகைக்காவலுமின்றி வெற்றிடத்தே கிடக்க, அவ் வியல்பை யறியாப் புதியோர் சிலர் அவற்றைக் களவுகொண்டிட எடுப்பின், அப்பொதியை அன்னர் கழுத்துக் கடுக்கத் தலையில் வைத்து ஊரைச் சூழ்விப்பதல்லது, அவர்க்கே யவற்றைக் கொண்டுபோகக் கொடாமையின், களவை மனத்தாற் கனவில்நினைப்பினும் நினைப்போரை நடுக்குவிக்கும் வெள்ளிடை மன்றமும் ; கூனர் குறளர், ஊமர் செவிடர், குட்டநோயாள ரென் றித்திறத்தோர் முழுகி வலஞ்செய்து அக்குறை தவிர்ந்து நன்னிறம் பெறுதற்கேதுவாய் விளங்கும் பொய்கையையுடைய மன்றமும்; பித்தர் நஞ்சுண்டோர் அரவு தீண்டப்பட்டோர் பேயால்தாக்குற்றோர் என்னும் இவர்கள் வந்து தொழலால் அத்துயரை நீக்குவிக்கும் தெய்வத்தன்மையுடைவோர் ஒளிவீசும் நெடிய

கல் நிற்கும் மன்றமும்; பொய்த்துறவிகள் நிறைதவிர் பெண்டிர் பிறர்மனைநயப்போர் முறைமையிற்றிரிந்த அமைச்சர் பொய்க்கரிகூறுவோ ரழுக்காறுடையோ ரென்றித்திறத்தாரைத் தன்கைப் பாசத்தாற் கட்டிப் புடைத்துண்ணுமப் பூதம்நிற்கும் பூதசதுக்கமும்; அரசு கோல்கோடினும், அறங்கூறவையத்தார் நடுவு நிலைதிறம்பி ஒருபாற் கோடினும், நாவாற்கூறாது நீருகுத்துக் கண்ணாற்கூறும் பாவைநிற்கும் பாவைமன்றமும் என்ற இவைகளிலும் அரும்பலி கொடுத்தனர். இங்ஙனம் அப் புகார்ப்பட்டினத்துத் தெய்வபீடங்கட்கெல்லாம் பலிகொடுத்தபின்னர், வச்சிரக்கோட்டத்தி லிருக்கும் முரசினை யெடுத்து யானைப்பிடரிலேற்றி, அயிராவதம் நிற்கும் கோயிலிலே சென்று விழவின் முதலும் முடிவுஞ் சாற்றி, கற்பகத்தரு நிற்கும் கோயிலிலே சென்று அயிராவதம் எழுதிய இந்திரன் கொடியை அந்தரத்தே பறக்கவிட்டனர்.

விழாச் சிறப்பு

காவிரி கடலொடு கலக்கும் சங்கமத் துறையினின்று தண்ணிய நீரைப் பொற்குடத்தின் முகந்துவந்து விண்ணவர் தலைவனை, மண்ணகமும் வானகமும் தம்முண் மயங்கிநிற்பத் தூநீ ராட்டினர். நுதல்விழிநாட்டத் திறையோன்முதலாப் பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீறாக வுள்ள கோயில்களில் நான்மறைநெறியில் தீமுறை யோம்பினர். தேவர் முப்பத்துமூவர்க்கும் அங்கங்கே அவரவர்குரிய விழவயர்ந்து நின்றனர். சமயவாதிகள் கல்விமண்டபத்தே சமயங்களி னியல்பைக்குறித்து வாதிடுவாராயினர். குளிர்ந்த மணல்பரப்பிய பந்தல்களிலும், அம்பலங்களிலும் அறிவின்மேம்பட்டோர் தருமோபதேசஞ்செய்தனர். சிறையில் வதியும் பகைமன்னரும் தீத்தொழிலாளரும் அரசன் ஆணையால் சிறைவீடு பெற்றனர். இசைக்கருவிகள் தெருவெங்கும் ஒலித்தவண்ண மிருந்தன. இங்ஙனம் இரவு பகலென்னும் வேற்றுமையின்றி விழாவாற் களிப்புமிக்க தெருக்களையுடைய அவ்வூரிடத்தே, நாளங்காடியின் பூக்கடைகளிலே நிறைந்துள பற்பல மலர்களின் மணத்தினைக் கவர்ந்து, மங்கையர் கூந்தல் புலர்த்தற்கெழுப்பிய அகிற்புகை திளைத்து, இன்னிசைபாடும் வண்டினொடும் இளவேனிலொடும் தென்றல் உலவும் தெருக்களையுடைய அப்புகாரிடத்தே, "அங்கண் வானத் தரவினுக் கஞ்சி, விண்ணகந் துறந்து மண்ணகத்தெய்தி, கருமுகில் சுமந்து சிறுமுயலொழித்து, இருகருங்கயலிடையே ஒரு குமிழமலரையுங் கொண்டொரு திங்களுமிங்குத் திரிதருகின்றதோ?" எனவும்;

பரத்தையை நச்சிய பண்பிலார் செயல்.

"கற்றைச் சடையண்ணல் நெற்றிக் கண்ணுறு தீயால் நீறுபு காமன் மீண்டும் மெய்பெறுதற்காகத் திங்களாம் நிலத்தே, அதன் தண்கதிர் நீரை மாந்தி வளரவளர்த்த வானவல்லி இந்நிலவுலகத்தில்வருதலுமுண்டுகொல்?" எனவும், "தனது இயற்கை வடிவொடு சென்று பலவுயிர்களைப் பருகுதற்கு மன்னன்செங்கோல் மறித்து நிற்றலைக் கண்டஞ்சி, கடுத்த வதனமும் இடித்த குரலும் ஒழித்து, வாணகை முகமும் யாழிசை மொழியுங் கொண்டு உருமாறிச் சுழல்வரு தோற்றமோ இப் பெண்வடிவம்?" எனவும், பொய்பல புனைந்து நலம் பாராட்டிப் பொதுமகளிர் ஊடல் தீர்த்து, அவரொடு கூடிப்பிரிந்த காளையர் அக்கூடலால்தம் உடற்செவ்வி மாறுபட்டுள்ளதைக் கண்டு, "இதனை யெம்மனைவியரறியின் என்னாம்?" என அஞ்சித் தாம் தம்மில்லிற்குத் தனியேசெல்ல விழையாது விருந்தினர் சிலரையும் உடனழைத்தேகினர். அருந்ததியன்ன ஆயிழை மகளிர் தம் கொழுநர்செய் வஞ்சகம் அறிந்தனராயினும் அதனைக் கருதாது அவரொடு ஒன்றிய நெஞ்சராய் வேண்டுவ புரிந்துநின்றார். அஃதறிந்த அத்தெய்வக் கற்பினர்தம் கணவர், "எம் உயிரனைய மனைவியர் சீற்றம் இவ்விருந்தால் தீர்ந்ததில்லையாயின் இம் மாநில வரைப்பின் அதற்கு வேறொருமருந்தும் உண்டுகொல்?" எனத் தம் நெஞ்சொடு கூறிச் செயலற்று நின்றனர்.

4. விண்ணவர் கோமான் விழவின் இறுதி.

இங்ஙனம்பல நிகழ்ந்தவவ் விண்ணவர்கோமான் விழவுநா ளகத்தே கோவலனொடு கூடிவாழும் மாதவிக்கு வலக்கண்ணும், அப்பேறு பெறாத கற்பிற்சிறந்த கண்ணகிக்கு இடக்கண்ணுந் துடித்தன.

காதலரின் ஊடலும் கூடலும்

அவ்வாறு அக்கண்கள் துடித்தற்குள்ள ஏதுவின் செவ்வி இதுவென இப்பொழுதே சிறிதுசிறிதாக அரும்பத் தொடங்கிற்று. மண்ணும் விண்ணும் தம்முண் மயங்கிநிற்ப வாசவற்கெடுத்த அவ் விழாநாளிலே மாதவி, தேவரும் யாவரும் திகைப்ப ஆடலும் பாடலும் புரிந்து நின்றாள். "இவளுடைய இவ் ஆடல்பாடல் அழகெனும் இவைதாம் எனது அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடிகளைக் கைக்கொண்டு இவளொடு நாடொறும்பயிலும் எனக்கே மயலூட்டினவெனின் மற்றவர்க்கு எவ்வாறாம்?" எனப் பெருமூச்செறிந்து அவள்மீது வெறுப்புற்றிருந்தான் அவள் காதற்பெருமகன் கோவலன். அதனையறிந்த மாதவி, சுருள்கருங் குழலில் நறுமணம் ஊட்டி, பிறைநிகர் நுதலிற் றிலகமணிந்து, செம்பஞ்செழுதிய சீறடிதன்னிற் பாடகஞ் செறித்து, பைம்பொன் விரிகிகை யிடையினிற் றரித்து, செம்பொனாரமும், செழுமுத்தாரமும், வயிரப்பதக்கமும் கழுத்திற் பூண்டு, அன்னமெனத்துன்னி, மயிலெனவொதுங்கி, இன்னுரைபுகன்று தன்காதலன் ஊடலைப் போக்கிக் கூடி மகிழ்ந்தாள். அங்ஙனம் மகிழ்ந்தவள் அவன்மனதை முற்றிலுங் கவரவெண்ணி 'ஏழையேன் கண்ணினும் எண்ணினும் கணமும் பிரிந்திடாக் காதல! எண்ணில் காமம் எரிப்பினும் மேற்செலாப் பெண்மையும் நாணும் அழிந்துவந்து குறையுற்றுக் கூடுந்துணையும் நீவிர் பிரிவாற்றி யிருந்தீரே; இஃது எளியாள்மீது அன்பின்மையைக் குறிப்பதன்றோ?" எனக்கூறிச் சிறிது முகங்கோட்டுதலும். "அன்புப் பெருக்கே, ஆருயிர்மருந்தே, அடியனையவ்வா றையுறவும் உன்னுளம் ஒருப்பட்டதே! நீ பலருமறியக் களிவருங் கூத்துநடித்ததைக் கண்டவன்றே என்னுளம் உற்றநிலை யென்னென் றியம்புகேன்? யான் ஒருவனே 'கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறிதற்' கேற்றவோ ரமுது, பிறர்க்கும் அச்செவ்வி பயக்குமியலும் நிலைமையைக் கண்டுவைத்திருந்தும், மனமாறுதுடனுறைதல் அவ் வழுதிடத்துக்கொண்ட ஒப்பற்ற அன்பே யன்றோ? அங்ஙனமாக அடியன் அன்பில் ஐயுறல் அவலமே" என்று தேற்றினன் கோவலன்.

"நன்றுநன், றையவிம் மாற்றம்! நுந்தம்விருப்பிற்கு மாறாக யான் என்றும் ஒழுகிலேன்; நினைத்துமிலேன். ஒருயிரை யீருயிராய்ப் பகுத்துணர்த்திய பரிச இன்றே கண்டேன்" எனக் கண்ணீ ருகுத்தாள். "பெறலரும்பேறே! வாழி இம்மெய்யன்பு நீடூழி! எளியனேன் புகன்றவிப் புன்மொழியை மறவாய்." எனக் கூறி ஈருடலும் ஓருடலெனப் புல்லிநின்றான்.

புகார்நகரத்தே இந்திரவிழா முடிவெய்தியது. நடனவரங்கில் ஆடல்பாடல் முதலியவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் தத்தம் தொழில்விடுத்துக் கண்படை கொண்டனர். அவிநய முதலிய கூறுபாடுகளை யறிகின்ற மக்கட்குக் கலை நயங்காட்டி நடிக்கும் நாடகமகளிர் யாவரும் அயர்ந்து உறங்கினர்.

விழவின் இறுதியிற் புகாரின் தோற்றம்

பாட்டில் வல்ல மகளிர் வளைசேர் செங்கை மெல்விரல்உதைத்த வெம்மையால் தம் தன்மையிற்றிரிந்த யாழ் முதலிய கருவிகளும்அவர்களைப்போன்றே ஒலியடங்கித்துயின்றன. தம் கொழுநர் பரத்தையர்முயக்கம் பெற்றமையான், ஆற்றாமல் உண்கண் சிவந்து ஒல்குமொரு கொடிபோன்று, அவர் தெருட்டவும் தெருளா ஊடலொடு துயிலும் மாதரார் கனவுகண்டு வெருவினரெனத் தம் கொழுநரை விரைந்து தழுவுவாராயினர். தளர்நடைச் சிறுவரொடு விளையாடு சிறுதேர்களீர்த்து மெய்வருந்தி, அமளியிலயரும் ஐம்படைத்தாலிக் குதலைச்செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்குக் காவற்பெண்டிர் கடிப் பகையாகிய வெண்சிறுகடுகு வேப்பிலை யிவற்றின் தூபங்காட்டித் துயில்கொளச் சென்றனர். வீட்டின் இறப்பிலும் நீரிலும் பொழிலிலும் உறையும்புட்கள்யாவும்அயர்ந்து உறங்கின. இங்ஙனம் விழவுக் களியடங்கி அப்புகாரெனும் பூங்கொடியே உறங்குபவள்போற் காணப்பட்டாள். அன்றைய இரவின் கடையாமம் இதுவெனப் பெருவெள்ளியொன்று கீழ்த்திசைதோன்றிக் காட்டியது. பொய்கைகளில் தாமரைப்பூஞ்சேக்கையில்பள்ளிகொண்ட புட்கள் துயில்நீங்கி ஆரவாரித்தன. கோழிகள் கூவின. வழக்கம்போல் அந் நகருறை மக்கள், தாழை புன்னை முதலிய தருக்கள் சூழ்ந்த கடற் கரைக்கண் இடம்பிடிக்க விரைந்து செல்வாராயினர்.

கடல்விளையாட்டு.

அஃதுணர்ந்த மாதவி தனது விருப்பத்தை அன்பனிடம் வெளியிட்டாள். அவனும் ஒருப்பட்டுத் தன்காதலியை ஓர் தேரிலேற்றித் தான் ஓர் குதிரைமீதமர்ந்து அளவிடற்கரிய நிதியினையுடைய பட்டினப்பாக்க வீதியினையும், கடல்வளமும் பிறவும் நிறைந்த மருவூர்ப்பாக்க மறுகினையும் கடந்து, மரக்கலந் தரும் செல்வம்பொருட்டுத் தம் உரிமை நாட்டைவிட்டுப் போந்த அயல்நாட்டார், அலைகளால் தொகுக்கப்பட்ட வெண்மணற் பரப்பிலே பலவகைக் கூலமும் குவித்து, இன்னின்ன சரக்கு ஈண்டுளதென்று சேய்மையிலுள்ளாரும் அறிந்துகொள்ளுதற் கறிகுறியாமாறு பலவகைக் கொடிகளை யுயர்த்தியுள்ள சேரிகளை நீங்கி நெய்தனிலத்தேயுள்ள கழிக்கானலை யடைந்தான்.

ஆங்கே தொய்யிற்குழம்பும் பூசுசாந்தும்தாமலரும் நறுமணச் சுண்ணமும் பண்ணிகார வருக்கங்களும் என்னும் இவற்றை விற்போர் வைத்த கடை விளக்குகளும், பிட்டுவாணிகர் பிட்டுவிற்றற்கு வைத்த விளக்குகளும், அப்ப வாணிகர் குடத்தண் காரகலை வைத்தேற்றிய விளக்குகளும், பல பண்டங்களை விற்கும் பெண்கள் தம் கடைகளில் வைத்த விளக்குகளும், இடையிடையே மீன்விற்போர் வைத்த விளக்குகளும், திசைக்குறி காட்டிக் கலத்தையழைக்கும் 'கலங்கரை'' விளக்குகளும், மீன் பிடிக்கும் வலைஞர் படகிலே வைத்த விளக்குகளும், அயல்நாட்டார் பனைகளைக் கால்களாக நாட்டி அவற்றின்மீது வைத்த விடிவிளக்குகளும் ஆகிய இவையெல்லாம் ஒருங்குசேர்ந்து, அக் கடற்கரையின் வெண்ணிய நுண்மணற் பரப்பிலே ஒரு வெண்சிறுகடுகும் புலப்படத்தக்க அத்துணைப் பேரொளி வீசிநின்றன.

கடற்கரையின் யாமக்காட்சி

அரசிளங் குமரர்களும் அவர் ஆருயிர்க் காதலிகளும், பிற செல்வக் காளையரும், ஆடல்பாடலில் வல்ல அழகிகளுமாக அங்கங்கே தண்ணறும் பொழிலிலும் வெண்மணற் குன்றிலுமாக விளையாட்டயர்ந்து நின்றனர். மணமிக்க மடலவிழ்ந்த பூக்களையுடைய தாழையை வேலியாகப் பெற்றுள்ள ஓர் புன்னைமர நீழலில், தூய வெண்மணற் பரப்பிலே, சித்திரத் திரையை வளைத்து, அதனால் மேற்கட்டுங் கட்டி, அதன் கீழ் இட்ட தந்தக்கட்டிலில் அமர்ந்தனர் மாதவியும் அவள் காதலனும்.

> வேலை மடற்றாழை யுட்பொதிந்த வெண்தோட்டு
> மாலைத் துயின்ற மணிவண்டு—காலைக்
> களிநறவந் தாதூதத் தோன்றிற்றே- காமர்
> தெளிநிற வெங்கதிரோன் தேர்.

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி.

[508வது-பக்கத்தொடர்ச்சி]

1-ம் பத்து 7-வது பதிகம்.

எம்பெருமான் எல்லாராலும் ஆராதிக்கப்படுவதற்குரியவனென்று முன் தசகத்தில் ஆழ்வார் அருளிச் செய்தார். இந்தத் தசகத்தில் அவன், தன்னைப் பஜநம் செய்கிறவர்களுடைய துக்கங்களையெல்லாம் போக்க வல்லவன் என்று ஸ்தாபிக்கிறார். தவிர, தான் அவனது சுகமான அநுபவத்தால் பேரின்பப்பேறு பெற்றாரென்பதைப் பரக்கச்சொல்லித் தனக்கிருந்ததுபோலவே மற்றவர்க்கும் பகவத்தநுபவம் இன்பரூபமாக இருக்குமென்றும் கற்பிக்கின்றார்.

> பிறவித் துயரற ஞானத்துள் நின்று
> துறவிச் சுடர்விளக் கந்தலைப் பெய்வார்
> அறவனை யாழிப் படையந் தணனை
> மறவியை யின்றி மனத்து வைப்பாரே. 1

பதவுரை:—பிறவித்துயர் - பிறவியாகிய துக்கம், அற-நீங்கும்படி, ஞானத்துள் - கேவல ஆத்மதரிசனமாகிற ஞானத்தில், நின்று - தபோநிஷ்டை பெற்று, துறவி- ஜடமாகிற பிரகிருதியினின்றும் ஒழிதலாகிய, சுடர்-(இங்கே) சுடர்பொருந்திய ஆத்மாவினுடைய, விளக்கம்-தெளிவை, தலைப்பெய்வார்-தலைப்பட வேண்

டுமென்ற இச்சையுடையவர்கள், அறவனை - தர்ம நெறியை யுடையவனை—அதாவது, எல்லாரும் ஸமமென்று நடத்தும் எம்பெருமானை, ஆழிப்படை அந்தணனை - சக்கிராயுதத்தைப் படையாக உடைய பாபமில்லாத புண்ணியபுருஷனை, மறவியையின்றி - மறக்காமல், மனத்து வைப்பார் - சிந்திப்பார்கள்.

குறிப்பு:—கைவல்யத்தை ஆசைப்படுகின்றவர்களுக் கவர்கோரும் பயனை (அதாவது ஜரை மரணம் முதலியவைகளின் மோக்கத்தை) அளிக்கிறானென்று ஐந்தாம்தசகத்தில் அருளிச்செய்தார். முன் தசகத்தில் "உள்கலந்தாருக்கு ஓர் அமுது" ஆனவன், மேற்செப்பிய கைவல்ய மோக்ஷ அபேக்ஷிதர்க்கும், "விள்கை" (அதாவது, அவனைவிட் டகல்வதை)"விரும்பு"பவர்க்கும், உதவுகின்றவன் என்றார். மேலும், அமிழ்தினுமாற்ற இனியனும் சுயம்பிரயோஜனமானவனு மாகிய அவனைவிட்டு, கடல்கடைந்த அமிர்தத்தைத் தேவதைகள் அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு, அந்தத் தூயவமுதும் முழுநலமும் பெரும்பேறும் பொருளுமென் றெண்ணி அகன்றார்களே யென்று மிகவும் பரிதவித்தார்.

இவ்வண்ணம் தன்னைக் கைவிடுவார்களுக்கும் தலையளிசெய்யும் சுபாவமுடைய எம்பெருமான் என்ன அறவனோ (அதாவது, பரமதார்மிகனோ), என்ன மனோவிசாலமுள்ளவனோ, என்ன அஸூயை லேசமுமில்லாதவனோ என்று, எம்பெருமானது நிறைவு பெற்ற ஔதாரியத்தில் இப்பாசுரம் இலக்குவைத்திருக்கின்றது. ஆனால், கைவல்யம் வேண்டுபவர்கள் அவனைப் பூஜிக்கிறார்கள் என்பதுதான் இப்பாசுரத்தில் மேற்போக்காய்க் காணக்கூடிய பொருள். இது நிந்தாஸ்துதிபரம் எனக் கொள்ளவேண்டும். தன்னை ஆச்ரயிப்பவர் எவ்வகையாராயினும் அவர்களை அவரவர் நோக்கம்போல் ஒத்த பக்தர்களாக அவன் ஏற்பான் என்பது இப்பாசுரத்தின் நோக்கம்.

வைப்பாம் மருந்தா மடியரை வல்வினைத்
துப்பாம் புலனைந்துந் துஞ்சக் கொடானவன்
எப்பால் யாவர்க்கும் நலத்தா லுயர்ந்துயர்ந்து
அப்பா லவனெங் களாயர் கொழுந்தே. 2.

அந்வயம்:—அடியாரை வல்வினைத் துப்பாம் புலனைந்தும் துஞ்சக்கொடான்; அவன் எப்பால் யாவர்க்கும் நலத்தால் உயர்ந்து உயர்ந்து அப்பாலவன்; எம் ஆயர்கொழுந்தே வைப்பாம் மருந்தாம்.

குறிப்பு:— துப்பாம் புலன்கள் - நல்வினைக்கோ தீவினைக்கோ இழுக்கும் ஐம்புலன்களை, துஞ்சக்கொடான்-நசிக்கவிடான். மருந்தாம் - கூடக்கூடப் பிறந்து இறந்துபடும் ஜன்மங்களாகிய சம்சாரமெனு நோய்க்கு ஔஷதமாகும். வைப்பாம் - மிக ஜாக்கிரதையாய்ச் சேர்த்துவைத்த நிதியாம். அடையவேண்டியஸ்தானம்—நலத்தால் - வேதத்தில் ஆநந்தவல்லியில் ஓதியபடி ஆநந்தத்தால்; உயர்ந்து உயர்ந்து அப்பாலவன் - அவ் வாநந்தவல்லியில் சொல்லியபடி நூற்றுக்கணக்காய்ப் பெருகியுள ஆநந்தம்முதலான கல்யாண குணமுடையவன், இப்படிக்கு என்னால் பரிசோதிக்கக் கூடிய சோபநகுணம் உடையவன், ஆயர்களுக்கு - இடையர்குலத்துக்கு, கொழுந்து - கிருஷ்ணனாக அவதரித்துச் சுலபமானவன்.

ஆயர் கொழுந்தா யவரால் புடையுண் ணும்
மாயப் பிரானையென் மாணிக்கச் சோதியைத்
தூய வமுதைப் பருகிப் பருகியென்
மாயப் பிறவி மயர்வறுத் தேனே. 3.

அவதாரிகை:—நாம் இத்தசகத்தின்முதலில் உரைத்தவண்ணம், யோகீச்வரரான ஆழ்வார் ஈண்டுத் தம் மாநஸாநுபவத்தைக் கூறியே நமக்குத் தத்துவத்தை வெளிப்படுத்துகிறார். தன் திருவடிகளுக்கே அடிமை பூண்டு ஆச்ரயிப்பவர்களுக்குப் பரமநிதியாயும் ஸம்ஸாரமருந்தாயும் உதவு மெம்பெருமா னொருவனைத் தான் அநுபவித்தவிதத்தை இப்பாசுரத்தில்கூறுகிறார்.

கருத்து-ஆயர்களுக்கிணங்கி அவர்களுடன் ஸர்வ கலவியும் செய்து வர்த்தித்த ஆச்சரிய குணாதிசயமுள்ள வெகு பிரபாகலைகள் விளங்கும் திவ்விய அழகுடையவனைப் பரிசுத்தமான அமிர்தம்போன்றவனை நாள்தோறும் விடாமல் அநுபவித்து என் பிரகிருதியாகின்ற பிறவியை நான் அறுத்துக்கொண்டேன். அதனால் அவனோடு நீர்க்கமான கலப்புக்கு விரோதியான ஸம்ஸாரத்தைப் போக்கிக்கொண்டேன்.

மயர்வற வென்மனத்தே மன்னினான் றன்னை
உயர்வினை யேதரு மொண்சுடர்க் கற்றையை
அயர்வி லமரர்க ளாதிக் கொழுந்தையென்
இயைவினை யென்சொல்லி யான்விடு வேனோ. 4

அவதாரிகை:—இன்னபடி எம்பெருமானோடு ஏற்பட்ட கலப்புக்கு இனி ஒருபடியாலும் ஒழிவில்லை என்கின்றார். "தன் திறத்தில் எனக்குள்ள அஞ்ஞானமெல்லாம்போ யகலும்படிக்கு என்னுள்ளே புகுந்தருளித் தன்னுடைய சுபமான குண ஸ்வரூபங்களை மிகத்தெளிவாக எனக்குக் காட்டியருளித் தனக்கொப்பாரான நித்தியஸூரிகளோடு ஒருநீராகக் கலக்குமாப் போலே என்னோடு கலவிசெய்தருளினவனை எங்ஙனே நான் விடும்படி"—ஆறாயிரப்படி உரை.

குறிப்பு:—மன்னுதல் - ஸ்திரமாக இருத்தல்; உயர்வினையே தரும்-நாளுக்குநாள் நற்குணங்களைப் பெருகச்செய்து ஏற்றம் தரும்; ஒண்சுடர்க் கற்றையை— உயர்ந்த தேஜஸுகளால் திரண்டிருப்பவனை. ஆதிக் கொழுந்து - வேரும் செடியும்—அதாவது போஷகனும் முக்கியமானவனும்; என் இயைவினை-எனக்கு அத்தியந்த சுலபனை, வேண்டியவண்ணம் செய்பவனை; விடுவேனோ - விடமுடியாது. (1) அஞ்ஞானத்தைப் போக்கவில்லை என்றாவது (2) அடுத்து உபகரிக்கவில்லை என்றாவது (3) விசேஷமான ரசமில்லாதவனென்றாவது (4) தன் ஸௌசீல்யத்தைக் காட்டி என்னை அவன் பக்கல் வீழ்த்தாதவனென்றாவது, எந்தக் காரணத்தாலும் நான் அவனை விடத்தக்கவனல்லன்" சொல்லி - என்பதற்கு "என்ன காரணம் கூறி" என்பது பொருள்.

விடுவே னோவென் விளக்கையென் னாவியை
நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதனைத்
தொடுவே செய்திள வாய்ச்சியர் கண்ணினுள்
விடவே செய்து விழிக்கும் பிரானையே. 5.

பொழிப்புரை:—"நிர்ஹேதுவாய் இடைச்சேரியில் பெண்பிள்ளைகளினுடைய கண்களிலே தோன்றி மற்றொருவருக்கும் தோற்றாதபடி களவிலே சில செயல்

களைச் செய்தும், திருக்கண்களாலே பார்த்தருளியும் அவர்களைத் தன்வசப்படுத்தி அவர்களோடு கலந்தாற் போலே நிர்ஹேதுவாக வந்து எனக்குத் தன்னுடைய குணசேஷ்டிதங்களைக் காட்டி இவற்றிலே என்னை வசப்படுத்தி எனக்குத் தாரகனாய் என்னோடே கலந்தருளின கலவியாலே என்னை உய்யக்கொள்கின்ற நாதனை நான் விடுவேனோ" — ஆறாயிரப்படி உரை

குறிப்பு:—நடுவே வந்து உய்யக்கொள்ளுதல் — வேண்டி வந்தவனல்லன். நிர்ஹேதுகமாகப் பகவான் உயிர்களுக்குக் கிருபை செய்பவன். ஆயர்பெண்கள் வேண்டாமலிருக்க அவர்களுடன் கலந்து இன்பமளித்தவன். எனக்கும் அவ்வண்ணமே அளிப்பவன். தொடுவேசெய்து-நவநீத முதலானதைத் திருடித் திவ்விய சேஷ்டையால் ஆயர்களை மயக்கினவன். விடவே செய்து "கண்ணோடு கண்ணினை நோக்கு ஒக்கின்" என்கிற ரீதியால் பிறரறியாமல் ஆய்ச்சியர்களை வசப்படுத்தினவன்.

பிரான்பெ ருநிலங் கீண்டவன் பின்னும்
விராய்ம லர்த்துழாய் வேய்ந்த முடியன்
மராமர மெய்த மாயவன் என்னுள்
இரானெனில் பின்னையா னொட்டு வேனோ. 6.

கருத்து:—அவன் தான் விட்டுவிட்டால் என்னசெய்வது என்றாலோ? தன்னுடைய அதி மனோஹரமான திவ்விய சேஷ்டிதங்களாலும் அழகாலும் என்னைத் தோற்பித் தடிமையாக்கினவன், என்னை விடுவான் என்றால் நான் அவனை விட்டுவிடுவேனோ?

குறிப்பு.— பெருநிலம் கீண்டவன் - யுகப்பிரளயத்தில் அண்ட ஓட்டோடு ஒட்டிக்கிடந்த பெருநிலத்துக்குக் காரணமும் உபகரணமுமான பிருகிருதி தத்துவத்தைச் சிருஷ்டிகாலத்தில் பிரித்துப் பெரிய நிலமாக்கிக் கொடுத்தவன். மனுஷன்போன்ற சேதநர்கள், பகவான் ஆளுகைக்குத் தப்ப இயலாதது போல் பக்தர்களை ஒழிக்க அவனாலும் இயலாது. ஸர்வசக்தனாலும் சுவயம்பிரபுவாலும் கருணை மீறிப் பக்தர்களைத் தள்ளி ஒழிக்க அசக்தனானவன் - ஆகையால் அவன் என்னை விடுவது அவனுக்குக் கூடவாய்க்காது.

யானொட்டி யென்னு ளிருத்துவ மென்றிலன்
தானொட்டி வந்தென் தனிநெஞ்சை வஞ்சித்து
ஊனொட்டி நின்றென் னுயிரில் கலந்து இயல்
வானொட்டு மோஇனி யென்னை நெகிழ்க்கவே. 7.

பொழிப்புரை:—எம்பெருமான், நான் அவனை மனதாலணைத்துப் பக்திப்பரவசமாய்ஊன்றுகிறவரைக்கும் காக்காமல் தானே சுவயமாய் வந்து என் எத்தனம் ஒன்றுமில்லாமல் என் தனி — (தாந்தோன்றியாய் அடங்காமல் பயிலும்) நெஞ்சத்தைத் தனது ஸௌந்தரியத்தைக்காட்டி என்னையுமறியாமல் வஞ்சித்துப் பிரகிருதியில் கலந்திருக்கும் என் ஆத்மாவோடு ஸ்திரமாகப் பிரசன்னஞ்செய்துகொண்டு கலந்து உல்லாசமாய்ப் பரிமாறுகிறவன்; என்னைவிட்டகலச் சம்மதிப்பனோ? இத்துணைச்சினேகமாய் இணைந்தவன் என்னை நெகிழ்க்க விடுவானோ -விடான். இது உறுதியே.

குறிப்பு:— ஐந்தாவது பாசுரத்தில் தாம் அவனை விட்டகலப் பிரஸக்தியில்லையென்று ஏற்கனவே நிரூபித்தும், 6-வதுபாசுரத்தில் அவனைவிடப் பிரஸக்தியில்லை என்று சொல்லியும் நிற்க, வேறு என்ன சங்கையை இப்பாசுரம் பரிஹரிக்கவந்தது என்ற கேள்வி உதிக்கலாகும். இதற்குப்பரிஹாரமாய்ப் பெரியோர்கூறுவது என்னெனில், முன்போல் அநர்ஹதாநு ஸந்தானத்தினாலாவது, கைவல்லியர்கள்போல் பிரயோஜநாந்தரங்கள் கொண்டாவது இதுபோன்ற வேறு ருசி விசேஷத்தாலாவது என் புத்திக்கு ஒரு கலக்கம் நேர்ந்து நான் அவனை அகன்றால் என்செய்வது என்ற சங்கையை இப்பாட்டில் பரிஹரிக்கிறார். இச்சங்கைக்கு விடை—யாதாக எத்தனித்து அவனது கலவை நேர்ந்திருந்தால், அவன் பிரிவும் அக்காரணத்தாலேயே ஏற்படும். அவனாய் வந்து பிரதிக்ஞை செய்துகொண்டு சேர்ந்தவன் அவன் தானே விடுவது ஒன்றன்றி நான் விடுவது என்ற யோசனைக்கு இடமுண்டோ?

என்னை நெகிழ்க்கிலு மென்னுடை நன்னெஞ்சந்
தன்னை அகல்விக்கத் தானும் கில்லானினிப்
புன்னை நெடும்பணைத் தோள்மகிழ் பீடுடை
முன்னை யமரர் முழுமுத லானே. 8.

பெறும்பேறுகிய நீளாதேவியின் மூங்கில்போன்ற தோள்களை அணைந்து மகிழ்கின்றவன், அமரர்கட்கு ஸத்தாஸ்திதி பிருவர்த்திகளுக்கு நிர்வாஹகனாயிருந்தாலும், என்னைவிட்டு அகல அவன் சங்கல்பித்தாலும் அச் சங்கல்பத்தை நிறைவேற்ற அவனாலும் என் நெஞ்சை விடமுடியாது. ஏனெனில் அது நற்பின்னை பிராட்டியாகிய நீளாதேவிக்கு அடிமையன்றோ!

"கர்த்தவியம் மஹதாச்ரயம்" என்கிற நீதிப்படி, எனக்கு அவனாலும் வெகுமானிக்கக்கூடிய நற்பின்னை ஆச்ரயம் இருக்கிறதென்கிறார்.

அமரர் முழுமுத லாகிய வாதியை
அமரர்க் கமுதீந்த வாயர் கொழுந்தை
அமரர் வழும்பத் துழாவி யென்னாவி
அமரத் தழுவிற் றினிய கனுமோ. 9.

பொழிப்புரை:—நித்தியஸூரிகளின் ஸத்தாஸ்திதி பிரவர்த்திகளுக்குக் காரணபூதனாய்த் தேவர்களுக்கு அவர் வேண்டுகோளுக்கு இணங்கி அமிர்தத்தைக் கொடுத்து ஆயர்களானவர்களுக்குத் தலைவனாய் அவதரித்து அந்த அவதாரத்தில் கோபிகளைத் தன் வடிவழகால் மயக்கினாற்போல் என்னையும் தன் ஸௌந்தரியத்தில் ஈடுபடச்செய்து அருளுகிற எம்பெருமானோடே, அவன்வேறே யான்வேறே என்று பிரிக்க வொண்ணாதபடி கலக்கையாலே இனி என்னாலு மவனை ஒருபடியும் விடமுடியாது.

குறிப்பு:—I வழும்ப - முழுவதுமகப்பட, துழாவி-ஈசனுடைய ஸ்வரூப குணங்களில் என் மனதால் வியாபித்து. அமர - ஒன்றோடு ஒன்று கலப்பதில் பிரிக்கவொண்ணாதபடி. தழுவிற்று - சேர்ந்தது. முழுமுதல் - ஸத்தை ஸ்திதி பிரவர்த்தி எல்லாவற்றிற்கும் காரணம்.

குறிப்பு:— II ஈண்டு, அமிர்தம்கொடுத்ததை எடுத்தது—தேவர்கள் அமிர்தம் திருமாலிடத்தில் வேண்டிக் கொண்டார்கள். "அமிழ்தினுமாற்ற இனியன்" எனத்தன்னை வேண்டிக்கொள்ளவில்லை-என்று குறிக்க. அநேக இருடிகள் பகவானை முழுவதும் ஆலிங்கனம்

செய்து நாயகனை அநுபவிக்க வேண்டுமென்று வெகுகாலமாய்ப் பிரார்த்தித் திருந்தார்கள். இவர்கள் வேண்டுகோள்நிறைவேறக் கிருஷ்ணாவதாரத்தில் சமயம் வாய்த்தபடியால் அவர்கள் எல்லோரும் அவன் சங்கல்பப்படி கோபிகைகளாக ஜந்மம்எடுக்கவே அவர்களோடு கலவைசெய்து இஷ்டபூர்த்தியைப் பகவான் செய்வித்தான். கிருஷ்ணாவதாரம் முடிந்தபின் அர்ச்சுனன் பகவனது நியமனப்படி இந்தக் கோபிகைகள் எல்லோரையும் வடக்குதிக்கி லழைத்துச்சென்றான். இவர்கள் ஸிந்துநதியின்கரையைச்சேர்ந்து அவகாஹ ஸ்நாநம்செய்ய அந்தநதியில் முழுகிக் கரை ஏறினவுடன் அர்ச்சுனன் அவர்களைக் கண்ணுற்றபோது ஜடாமண்டலதாரியாய்த் தபசிகளாகக்காணப்பட்டார்கள். ஆகவே யார்யார் எவ்வண்ணம் யாசிக்கின்றார்களோ அவ்வண்ணம் அவர்களுக்கு அளித்துக் காப்பவன் என்பது ஆழ்வாரின் நோக்கம். அவனையே வணங்குபவர்களுக்குத் தன்னையே கொடுப்பான். இத்துணையும், தானும் எம்பெருமானும் பிரிய இடமில்லை என்று சிற்சில காரணங்களைக் கூறினவர் இப்பாசுரத்தில் தமக்கும் அவனுக்கும் ஏற்பட்ட கலவி ஒன்றோடொன்று பிரிக்கவொண்ணாத கலவை, ஆகையால் தமக்கு ஒருநாளும் அவனைவிட்டு நீங்குதல் இல்லை என்று அறுதியிடுகிறார்.

அகலி லகலு மணுகி லணுகும்
புகலு மரியன் பொருவல்ல னெம்மான்
நிகரி லவன்புகழ் பாடி யிளைப்பிலம்
பகலு மிரவும் படிந்து குடைந்தே. 10.

பொழிப்புரை: — பக்தர்கள் அகன்றால் தானும் அகலும். அக்கணமும் அப்படி யகலுகை தன்னிழவாக நினைத்தகலும் அணுகினால் அணுகும் - பக்தியினால் கலப்பவரை ஆதாரவோடு தன் பேறாக அணைவித்துக் கொள்ளும் - உதாசீன புத்தியுள்ளவர்களுக்கு எட்டக்கூடாதவன். அதாவது தடையாகாமல் சுலபமாய்க் கிட்டக்கூடியவன் (பொரு - விரோதி - இங்கே தடை) எம்மான் - என் ஸ்வாமி- நிகரில் - ஒப்பில்லாத. இரவும் பகலும் அவன் புகழ் பாடி அந்தக் கைங்கரியத்திலேயே, படிந்து - ஊன்றி- குடைந்து - நிரம்ப முழுகி - இளைப்பிலம், ஒழிவில்லாதவன். இங்ஙனம் ஸதா அவன் புகழிலில் ஊர்ஜிதமாய் நின்று பாடினும் திருப்தியடையாதவனாயிருக்கிறேன்.

குடைந்து வண்டுண்ணும் துழாய்முடி யானை
அடைந்த தென்குரு கூர்ச்சட கோபன்
மிடைந்த சொல்தொடை யாயிரத்திப் பத்து
உடைந்து நோய்களை யோடு விக்குமே. 11

பொழிப்புரை:—இந்தத் திருவாய்மொழி வல்லாருடைய எல்லாத்துக்கங்களையும் இந்தத் திருவாய்மொழியே தானே யுடைந்தோடும்படி செய்யும்.

கருத்து:—பகவத் பஜநம்-வழிபடுகை - சுகரூபமாயிருக்கும் "சீலத்திருமால் அறவினியன்பற்றமவர்க்கு" என்று, மணவாள மாமுனிகளும் இத்தசகத்தின் கருத்தை ஸங்கரகித்தார்.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[511-வது பக்கத் தொடர்ச்சி]

நடத்தை (Behaviour).

சிற்றிளக்கம்:—பழக்கம் எனப்படுவது உயிருள்ள பொருள்களிடத்து மட்டும் காணப்படுவது ஒன்று அன்று. தண்ணீரை மணலில்ஊற்றுகின்றேன். எளிய வழியில் ஓடுகிறது. மறுமுறையும் அவ்விடத்திலேயே ஊற்றினால் அந்தப் பழையவழியில்தான் ஓடுகின்றது. பாலாறு வற்றிப்போனபின்பு மழைபெய்யுமானால் பழையவழியே பாய்ந்தோடுகின்றது. நாம் அணியும் குப்பாயங்களும் பழகப்பழக நம் முடலமைப்புக்குத் தக்கவாறு படிந்துவிடுகின்றன. உலகத்துப் பொருள்களைத் தாக்கினால் அவை எதிர்த்துநிற்கின்கின்றன. உடனே இளகி வளையாது அவைகள் இறுகி நிற்கின்றன. ஆனால் தாக்கல் மிகுதியானபோது மாறிநின்று சிறிது இளகி வளைந்துகொடுக்கின்றன. பின்னர் மாறிநின்ற அந்நிலையே அவற்றின் பின்னைய நிலையாகின்றது. இச் சிற்றிளக்கமும் சிற்றிறுக்கமும் (Plasticity) உருப்பெறுந் தன்மையுமே பழக்கத்திற்கு முதலாகின்றன. கருங்கல்லும் சிற்றிளக்க முடையதேயாம். "அடிமேல் அடி யடித்தால் அம்மியும் நகரும்" என்ற பழமொழி இவ்வுண்மையைத்தான் விளக்குகின்றது. நம்முடலிலும் ஏதேனும் புண்ணுண்டானாலும் சுளுக்குண்டானாலும் அவற்றிற்கருகில்தான் பின்னும் அடிவிழுகிறது. "பட்ட காலிலேயே படும்,கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழி இதுபற்றியே எழுந்தது. நாளான நோய்களைப் போக்குவது அருமை: ஏன்? அவை நமது உடலிற் பழக்கமாய் அமைந்துவிட்டபடியாலன்றோ?

நரம்புகளின் இளக்கம்:—இங்ஙனமே நமது நரம்புகளிலும் பழக்கங்கள் படிகின்றன. ஒரு நரப்பமும் மற்றொருநரப்பமும் கூடுகின்றஇடத்தில் கூடல்வாய் (Synapse) என்ற தடையிணைப்பு ஒன்று உண்டு எனக் கண்டோம். நரம்புக்கிளர்ச்சி அங்குச் செல்லும்போது காலந்தாழ்த்து ஓடுகின்றது என்றும் கண்டோம். ஆகையால் கூடல்வாயில் ஏதோ ஒரு தடையுண்டெனவிளங்குகிறது. ஆனால் ஒருமுறை நரம்புக்கிளர்ச்சி கூடல்வாய்வழியாக ஓடிவிடுமானால், அத்தடை குறைகின்றது; பின்னர் அக் கூடல்வாய்வழியாகக் கிளர்ச்சி விரைந்து ஓடுகின்றது. கூடல்வாயின் தடை நீக்கமன்றோ பழக்கம் எனப்படுவது! நமது உடலிலுள்ள கூடல்வாய்கள் பலவும் பலவேறு நிலையில் இருக்கின்றன. சில தடை நீங்கப்பெறாதும் சில தடை நீங்கியும் சில சிறியதடை நீங்கியும் இவ்வாறு பலநிலையில் விளங்குகின்றன. அவற்றின் இறுக்கநிலையும் இளக்கநிலையும் வெவ்வேறாக மாறுபடுகின்றன.

அத்தறுவாயில் ஒரு நரம்புக்கிளர்ச்சி வெளிப்படுமானால் எளிதாய் இளகியவழியே சென்று முடிகின்றது. கூடல்வாய் அடிக்கடி இயக்கமுறுமானால் களைத்துப் போகுமாதலின் அக்களைப்புநிலையில் அவ்வழியாக நரம்புக்கிளர்ச்சி போவது அருமை. அதுபோது வேறு எளியவழியைத் தேடிப்போகும்.

மடை ஏற்றல்:—நரம்புக்கிளர்ச்சியை வலியுறுத்தல் என்றும் அதை எதிர்மறுத்தல் என்றும் இரண்டு நிகழ்ச்சிகள் காணக்கிடக்கின்றன. ஓர் இயக்கஅமைப்போடு பல புலனரப்பங்கள் தொடர்புண்டு கிடக்கின்றன. காலை அசைக்கும் தசைநாரோடு, கண் காது மூக்கு முதலிய பல பொறிகளினின்று செல்லும் புலனரப்பங்கள் இயைந்து விளங்குகின்றன. பேரொளி கேட்டாலும் ஓடுகின்றோம்! அஞ்சும் பொருளைக் கண்டாலும் ஓடுகின்றோம்; புலியின் நாற்றத்தை யுணர்ந்த ஆடும் ஓடுகின்றது. மாங்கனி என்ற பெயரைக் கேட்கின்றேன். என் நாவில் அத்துணைவிரைவில் நீர் ஊறவில்லை. உடனே, நான் அதன் மணத்தையும் உணர்வேனானால் சிறுக நீர் ஊறலாம். அம் மாங்கனி என்கண்ணுக்கும் புலனாகுமானால் நீரூறிப்பெருகிவிடுகின்றது. மாங்கனியோ தொலைவில் இருக்கின்றது. ஆதலின் தனியே அக்காட்சிமட்டும் நீரூறுதலை உண்டாக்குவதில்லை; வெறும் மணம்மட்டும் உண்டாக்குவதில்லை; பெயர்மட்டும் உண்டாக்குவதில்லை. இம்மூன்றுணர்வும் ஒன்றாகவோ அல்லது ஒன்றின்பின் மற்றொன்றாகவோ எழுந்ததால் நரம்புக்கிளர்ச்சி வலிவுற்று நீரூறுதல் என்றசெயலைச் செய்துமுடிக்கின்றது. நீர்ஊறுதலை எழுப்புவது எச்சிற்கழலையின் இயக்கமே யாகும். காதுவழியாக வரும் புலனரப்பமும், இந்தக் கழலையில் முடிகின்றது; கண்வழியாக வரும் நரப்பமும், மூக்குவழியாக வரும் நரப்பமும் அவ் வெச்சிற்கழலையில் முடிகின்றன. இம்மூன்று புலனரப்பம்வழியாக வருகின்ற நரம்புக்கிளர்ச்சிகள் தனித்தனியாக நின்றால் நீரூறுதல் என்ற செயலை எழுப்பமுடியாது. ஆனால், மூன்றும் ஒரே கழலையில் ஒருங்கே வந்து முடிவதால் முதலெழுந்த கிளர்ச்சியை மற்றைய இரண்டும் வலியுறுத்தவே, கிளர்ச்சி மிகுதிப்பட்டு நீரூறுதல் என்ற செயலை எழுப்பிவிடுகின்றது. இம்மூன்று கிளர்ச்சிகளும் ஓரேபோதில் எழவேண்டும் என்பதில்லை; தொடர்ந்து ஒன்றின்பின் னொன்றாக எழுந்தாலும் அவ்வாறே ஒன்றையொன்று வலியுறுத்துகின்றன. ஒரு புலனரப்பவழியாகக் கிளர்ச்சியனைத்தும் வந்து திடீர் எனப் பாய்வதில்லை. இயக்கஅமைப்பை இயக்கியபின்னும் அக் கிளர்ச்சியில் ஒருசிறிது அந்நரப்பத்தில் ஒட்டிக் கிடக்கின்றது. அவ்வாறு ஒட்டிக்கிடக்கும்போது, பின்னர்த் தொடர்ந்துகிளர்ந்த மற்றொரு நரப்பம் அவ் வியக்கஅமைப்பில் வந்து பாயுமானால் பின்வந்த கிளர்ச்சியோடு முன் மிகுதியாகநின்ற கிளர்ச்சியும் ஒன்றுசேர்ந்து ஒன்றையொன்று வலியுறுத்துகின்றன. மாங்கனி என்ற பேரைக் கேட்டபின்னர் அதனைத் தொலைவில் கண்டபோதும் நாவில் நீரூறுவது இதனால்தான் என்க. பல கிளைகளினின்றும் வரும் நீரை ஒரு கால்வழியாக ஓட்டுவதற்கு ஒப்பாகும் இவ்வலியுறுத்தல்.

மடை மாற்றல்:—எதிர்மறுத்தல் என்பது மடைமாறிப் பாய்ச்சுவது போலாகும். கண்ணை வலப்புறம் திருப்பும் தசைநார்களும் உள்ளன; இடப்புறம் திருப்பும் தசைநார்களும் உள்ளன. கண்ணை ஒரே பொழுதில் வலமும் இடமும் திருப்பமுடியாதாகையால் இத் தசைநார்கள் ஒன்றையொன்று எதிர்மறுத்து நிற்கின்றன. அங்ஙனமே நமது கைகளிலும் கால்களிலும், நீட்டுத்தசைநார்களும் மடக்குத் தசைநார்களும் ஒன்றினை மற்றொன்று எதிர்மறுத்து நிற்கின்றன. மடக்கும்போதே அந்த உறுப்பை நீட்டுவதும் இயலாதன்றோ? ஒருவன் தெருவழியே செல்லுங்கால் அவனுக்கு வலப்புறத்தினில் ஒரு அழகிய மயில் ஆடிக்கொண்டிருக்கின்றது. இவன் கண்கள் வலப்புறமாகத் திரும்புகின்றன. அத்தெருவிலேயே அவனுக்கு இடப்புறத்தினில் ஒரு காகம் உட்கார்ந்திருப்பது புலனாகின்றது. அந்தத் தாக்கல் அவன் கண்களை இடப்புறமாகத் திருப்புவதற்கு வலியற்றதாகக் கிடக்கின்றது. இடப்புறம் திரும்பும் தசைநார்களிலே அக்காகத்தின் காட்சியால் நரம்புக்கிளர்ச்சி பாய்கிறது; ஆனால் வலப்புறத் தசைநார்கள் இயங்குகின்றமையால் இவ் விடப்புறத் தசைநார்கள் எதிர்மறுக்கப்பட்டன. ஆனால் இடப்புறத்தில் ஒரு பெரிய மின்னொளி எழுகின்றது. அல்லது ஒரு புலியின் இடிமுழக்கம் கேட்கின்றது. உடனே அம மனிதன் கண்கள் இடப்புறமாகத் திரும்புகின்றன. அந்நிலையில் வலப்புறம் திரும்பும் தசைநார்கள் எதிர்மறுக்கப்படுகின்றன. மக்கேல் என்ற அறிஞர் இந்தநிலையில் வலப்புறத் தசைநாரை இயக்க எழுந்த நரம்புக்கிளர்ச்சியானது இடப்புறத் தசைநாரை இயக்குவதற்கு எழும் நரம்புக்கிளர்ச்சியோடு ஒன்றாகச் சென்று இடப்புறமாக விரைவில் கண்ணைத் திருப்புகின்றது என்கிறார். குழந்தையின் எதிரே பெருந்தீ யொன்று கொழுந்துவிட் டெரிகின்றது. அத் தீச்சுடரைப் பிடிப்பதற்காக அக்குழந்தை கையை நீட்டப்புகுகின்றது; நீட்டுத் தசைநார்களில் அந்தப் புலனரப்பம் பாய்தல்வேண்டும். அதற்குள் அந்தத் தீயின் சூடு அக்குழந்தையின் கையில் உறைக்கின்றது. அப்புலனால் புலனரப்பில் கிளர்ச்சியானது புறப்பட்டு மடக்குந் தசைநாரில் பாய்கிறது. நீட்ட எழுந்த கிளர்ச்சியிலும் மடக்கஎழுந்த கிளர்ச்சி வலிவுடையது. ஆதலின் மடக்குதல் நிகழ்கின்றது; நீட்ட எழுந்த கிளர்ச்சியும் மடக்கஎழுந்த கிளர்ச்சியோடு ஒருங்கியைந்து மடக்குத்தசைநாரில் பாய்கின்றது. குழந்தையும் விரைந்து கையை மடக்குகின்றது. வலியுறுத்துதலை (Facilitation) நரம்புமடையேற்றம் என்றும், எதிர்மறுத்தலை (Inhibition) நரம்புமடைமாற்றம் என்றும் நாம் வழங்கலாம். நரம்பு மடைமாற்றம் எவ்வெப் பொழுது எழுகின்றது? ஒரு கிளர்ச்சியோடு உடன்எழுந்த கிளர்ச்சியோ, அல்லது அதனைத் தொடர்ந் தெழுகின்ற கிளர்ச்சியோ முன்னெழுந்ததினும் வலிவுடையதானால் நரம்புக்கிளர்ச்சி மடைமாறுகிறது. அல்லாக்கால் நம்முடையகருத்தை (Attention) ஒரு தூண்டலினின்றும் நீக்கி மற்றொன்றில் நாட்டியபோது முன்னைய தூண்டலால் எழுந்த கிளர்ச்சியும் பின்னைய தூண்டலால் எழுந்த கிளர்ச்சியோடு ஒன்றாய் ஓடுகின்றது. தீயைத் தொடவேண்டுமென்று எழுந்த குழந்தை கையை மடக்கவேண்டுமென்று எண்ணியதன்றோ?

18911

தமிழ்ப் பாடம் 128.

[513-வது பக்கத் தொடர்ச்சி.]

நைடதம்—நளன் தூதுப் படலம்

கொய்யுளை வயப்புரவி கோடி யுழைபோத
மையன்மத வாரண மருங்குற நெருங்க
வெய்யதிறல் வாளுழவர் வேலை புடைசூழ
மொய்திரை யளக்கரி னியம்பல முழங்க 4.

(உரை) கொய்-கொய்த, உளை -பிடரிமயிருடைய, வயம்-வெற்றி பொருந்திய, புரவி-குதிரைகள், கோடி-ஒருகோடி, உழை - பக்கத்தில், போத - வரவும்; மையல்-மயக்கமுடைய, மதம்-மதங்கொண்ட, வாரணம் - யானைகள், மருங்கு - பக்கத்தில், உற - மிகவும், நெருங்க - நெருங்கவும்; வெய்ய - கொடிய, திறல்-வலிமையுடைய, வாள் உழவர் - வாளால் பகைவர் உடல்களை உழுகின்றவர்களாகிய போர்வீரர்களது, வேலை - கடலானது, புடை - பக்கத்தில், சூழ - சூழவும்; மொய் - அடர்ந்த, திரை - அலைகளையுடைய, அளக்கரின்-கடலைப்போல, இயம் பல - பலவித வாத்தியங்கள், முழங்க - ஒலிக்கவும்—

விரிவுரை:—புறப்பட்ட நளன் வழிக்கொண்ட விதத்தை இதுவும் அடுத்தசெய்யுளும் கூறுகின்றன. இதனில் உள்ள, போத, நெருங்க, சூழ, முழங்க என்னும் வினையெச்சங்களும், அடுத்த செய்யுளில் உள்ள, நிழற்ற, இரட்ட, இறைஞ்ச என்னும் வினையெச்சங்களும், அச்செய்யுளில் உள்ள 'போனான்' என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிகின்றன. இந்த இரண்டு செய்யுள்களும் குளகம்.

குறிப்பு:—வெய்யதிறல், — குறிப்புப்பெயரெச்சத் தொடர், ஆதலாம் வல்லினம் மிகவில்லை. (3-435). 'மொய்திரை' என்பது வினைத்தொகை யாகையால் வல்லினமெய் மிகவில்லை.

அளக்கரின் - ஐந்தாம்வேற்றுமை ஒப்புப்பொருள். உழைபோத, புடைசூழ, என்பன ஏழாம்வேற்றுமைத் தொகைகளாதலால் வல்லினமெய் மிகவில்லை.

———

விரிகதி ரெரிக்குமதி வெண்குடை நிழற்றத்
தாளநகை மாதர்பலர் சாமரை யிரட்ட
எரிமணி யிமைக்குமுடி மன்னவ ரிறைஞ்சத்
திருவளரு மார்பனுயர் தேரின்மிசை போனான். 5.

(உரை) விரி - விரிகின்ற, கதிர் - கிரணங்களை, எறிக்கும் - வீசுகின்ற, மதி - சந்திரன்போன்ற, வெண் - வெண்மையான, குடை - குடையானது, நிழற்ற - நிழல்கொடுக்கவும்; தாளம் - முத்தைப் போன்ற, நகை - பற்களையுடைய, மாதர்பலர்-மாதர்கள், பலர், சாமரை - கவரியை, இரட்ட - இருபுறத்திலும் வீசவும்; எரி - நெருப்பைப்போன்ற, மணி - மாணிக்கங்கள், இமைக்கும் - ஒளிவீசும், முடி - கிரீடங்களை அணிந்த, மன்னவர் - அரசர்கள், இறைஞ்ச - வணங்கி வழியனுப்பவும், திரு வளரும்-இலக்குமி தங்கிய, மார்பன் - மார்பையுடைய நளன், உயர் - உயர்ந்த, தேரின்மிசை - தேரின்மேல், போனான் - சென்றான்.

குறிப்பு:—விரிகதிர், உயர்தேர், வினைத்தொகைகளாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. நிழற்றத்தாளம், இறைஞ்சத்திரு —வினையெச்சங்களுக்குப்பின் வருமொழிமுதல் வல்லின மிகுந்தன.

———

தேர்நடவு கம்பலை செவிப்புகுத லோடும்
வார்கடன் முழக்கொலி கொலோ மழைமுழக்கோ
சார்வதென வையமுறும் வானவர்க டம்முன்
ஏர்கெழுமு மாடநிட தத்திறை யெதிர்ந்தான் 6.

(உரை) தேர் - தேரை, நடவு - நடத்துகின்ற, கம்பலை - பேரொலியானது, செவிப் புகுதலோடும் - காதிற்பட்டவுடன், சார்வது-வருகின்றஇது, வார் - நீண்ட, கடல் - கடலானது, முழக்கு ஒலிகொலோ - முழக்குகின்ற ஒலியோ (அல்லது)மழை முழக்கோ - மேகத்தின் ஒலியோ, என - என்று, ஐயம் உறும் - சந்தேகப்படுகின்ற, வானவர்கள்தம் முன் - (நாரதர் தூண்டியபடி தமயந்தியின் சுயம்வரத்திற்குப் பூமியில் வருவாரான)தேவர்களுக்கு முன்னே, ஏர்-அழகு, கெழுமு -நிரம்பிய, மாடம்-மாளிகைகளையுடைய, நிடதத்து - நிடததேசத்திற்கு, இறை - அரசனான நளன் எதிர்ந்தான் - எதிர்ப்பட்டான்.

குறிப்பு:—செவிப்புகுதல், செவியில் புகுதல் என விரியும், ஆகையால் ஏழாம்வேற்றுமைத் தொகை. ஏழாம்வேற்றுமைத் தொகையில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாமற் புணர்வதே பொதுவிதியாயினும், 'செவி' என்னுஞ் சொல்லோடு சேர்ந்து வருகின்ற ஏழாம்வேற்றுமைத் தொகைகளில் வருமொழி முதல் வல்லினமெய் மிகுந்தே புணர்வதை நூல்களிற் பயின்றுவரக் காண்கிறோம்.

———

பொற்றடந் தேர்மிசைப் பொலிந்து தோன்றிய
மற்றடந் தோளினன் வனப்பு நோக்கினா
ருற்றதோர் வியப்பினுக் குள்ள மீந்துதாம்
வெற்றுடம் பாயினர் விண்ணு ளோரெலாம். 7.

(உரை)விண் உளோர் எலாம் - விண் உலகத்தவராகிய இந்திரன்முதலிய நான்கு தேவர்களும், பொன் தட தேர்மிசை - பொன்னாற்செய்த பெரிய தேரின் மேல், பொலிந்துதோன்றிய-பிரகாசத்துடன் காணப்பட்ட, மல் தட தோளினன் - வலிமைபொருந்திய பெரிய தோள்களையுடைய நளவேந்தனது, வனப்பு - அழகை, நோக்கினர் - பார்த்தார். (பார்த்து) உற்றது ஓர் வியப்பினுக்கு - உண்டான ஒரு ஆச்சரியத்திற்கு, உள்ளம் ஈந்து - தம் மனதைக்கொடுத்துவிட்டு, தாம் - தேவர்கள், வெறு உடம்பு ஆயினர் - வெறும் உடம்புமாத்திரமே உடையவர்கள் ஆனார்.

கருத்து:—நளன் தன்பரிவாரங்களுடன் தேரில்வந்த பேரொலி செவிக்கெட்டியதும், "என்னவோ இது" என்று ஐயமுற்றிருந்த தேவர்களுக்குமுன் அவ்வொலியைத் தொடர்ந்து, மிகவும் பொலிகின்ற அழகு வாய்ந்த நளனே தோன்ற, "இப்படியும் அழகுடைய ஒருவன் இருக்கக்கூடுமோ" என்ற ஆச்சரியமானது அத்தேவர்கள் கருத்தையெல்லாம் கவர்ந்துகொண்டு அகன்றுவிடவே அவர் தந்நினைவற்ற உடலினராய் நின்றனர்.

குறிப்பு:—இதுவரைக் கற்றுள்ள புணரிலக்கணத்தை இந்தச்செய்யுளில் பயிற்சி செய்துகொள்ளலாம்:—

பொன் + தட = பொற்றட:-ஈரிடத்தும் மெய் நின்று புணர்கின்ற இதற்கு விதி இன்னும் கூறவில்லை.

தட + தேர் = தடந்தேர். தட என்பது அகரஈற்று உரிச்சொல். அகர ஈற்று உரிச்சொல்லிற்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும் என்பது பொதுவிதி (3—467). தட + கை = தடக்கை, என்று ஆகின்றது. ஆனால் தட என்னும் உரிச்சொல்லிற்குப் பின், வருமொழிமுதலில் ககரமெய் அல்லாது, சகர தகர பகர மெய்கள் வருமெனில், அந்த மெய்களை மிகாமல், அவ்வந்த வல்லின மெய்களுக்கு இனமாகிய ஞகர நகர மகர மெய்கள் முறையே மிகுந்து புணரக் காண்கின்றோம். தட + கை = தடக்கை என்று புணருமேனும், தட + செவி = தடஞ்செவி, தட + தோள் = தடந்தோள், தட + புயம் = தடம் புயம், என மெல்லெழுத்தே மிக்குப் புணர்கின்றன.

தேர்மிசை + பொலிந்து = தேர்மிசைப் பொலிந்து—இங்கு மிசை என்னும் ஏழாம்வேற்றுமை உருபிற்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்து புணர்ந்தது.

பொலிந்து + தோன்றிய = பொலிந்துதோன்றிய—வினையெச்சத் தொடரில் வல்லினமெய் மிகுமென்பது பொதுவிதியாயினும், நிலைமொழி வன்றொடரல்லாத மற்றக் குற்றியலுகரங்களை ஈற்றிலுடைய வினையெச்சமாயின், வருமொழி முதல் வல்லினமெய் மிகாமல் இயல்பாகும் (3-434). பொலிந்து என்பதன் ஈற்றுக்கு அயலெழுத்து ந் என்னும் மெல்லினமெய் ஆகையால், ஈற்றிலுள்ள உகரம் மென்றொடர்க் குற்றியலுகரம். ஆதலால், வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

தோன்றிய + மல் = தோன்றியமல்—வருமொழிமுதல் மெல்லினமாகிய மகரமெய் நிலைமொழியீற்று உயிரோடு இயல்பாகப் புணர்ந்தது. (3—91)

மல் + தட = மற்றட—இன்னும் விதி கூறவில்லை.

தட + தோள் = தடந்தோள்--தடந்தேர்என்றதுபோல நகரமெய் மிகுந்தது.

தோளினன் + வனப்பு = தோளினன் வனப்பு—இன்னும் விதி கூறவில்லை.

வனப்பு + நோக்கினர் = வனப்பு நோக்கினர்— வருமொழிமுதலில் நகரமெய் (மெல்லினம்) வர, அது நிலைமொழியிறுதி உயிரோடு இயல்பாய்ப் புணர்ந்தது. (5—91).

நோக்கினர் + உற்றது = நோக்கினருற்றது—நிலைமொழியிறுதி மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறிப் புணர்ந்தது (2—586).

உற்றது + ஓர் = உற்றதோர்—நிலைமொழியீற்றுக் குற்றியலுகரங் கெட்டு நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறிப் புணர்ந்தது. (2-950)

ஓர் + வியப்பினுக்கு = ஓர்வியப்பினுக்கு —விதி இன்னும் கூறவில்லை.

வியப்பினுக்கு + உள்ளம் = வியப்பினுக்குள்ளம்—குற்றியலுகரம் கெட்டு நின்ற நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது (2—950).

உள்ளம் + ஈந்து = உள்ளமீந்து—நிலைமொழி ஈற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (2—586)

ஈந்து + தாம் = ஈந்துதாம்—மென்றொடர்க் குற்றியலுகர ஈற்று வினையெச்சத்திற்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் இயல்பாயிற்று (3—434(

தாம் + வெற்றுடம்பு = தாம்வெற்றுடம்பு—விதி இன்னும் கூறவில்லை.

வெறுமை + உடம்பு = வெற்றுடம்பு-நிலைமொழி பண்புச்சொல்லாயிருக்குமாயின், அது எவ்வித விகாரங்களை யடையுமென்கிற விதிகளை இன்னுங் கூறவில்லை.

உடம்பு + ஆயினர் = உடம்பாயினர்—நிலைமொழியீற்றுக் குற்றியலுகரங் கெட்டு நின்ற மெய்யின் மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (2-950).

ஆயினர் + விண் = ஆயினர்விண்—இன்னும் விதிகூறவில்லை.

விண் + உளோர் = விண் + ண் + உளோர் = விண்ணுளோர் — நிலைமொழி தனிக்குறிலை யணைந்த மெய்யை ஈற்றிலுடைய இரண்டெழுத்துச் சொல்லாதலால், அவ் வீற்றுமெய் விரிந்து வருமொழிமுதல் உயிரை ஏற்றது (2-632).

உளோர் + எலாம் = உளோரெலாம்-நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது (2-586).

இலக்கணம்.

நிலைமொழியீறு வருமொழிமுதல் ஈரிடத்தும் உயிராகவும், நிலைமொழியிறுதியில் உயிரும் வருமொழி முதலில் மெய்யுமாகவும், நின்று புணர்கின்ற விதிகளை இதுகாறும் கற்கலானோம். இனி, நிலைமொழியிறுதி வருமொழிமுதல் ஆகிய ஈரிடத்தும் மெய்யே நின்று புணர்கின்ற விதிகளைக் கற்றல் வேண்டும். கல் + சட்டி, என்பதில் நிலைமொழி யிறுதியில் ல் என்னும் மெய்யெழுத்தே யிருக்கின்றது. ஆனால், வருமொழி முதலில் இருக்கும் ச என்பது உயிர்மெய்யெழுத்தே ஒழிய ச் என்னும் மெய்யெழுத்தன்று. ஆயினும், அவ் வுயிர்மெய்யெழுத்தி னொலியின் முதலில் ஒலிப்பது ச் என்னும் மெய்யின் ஒலியேயாகையால், வருமொழிமுதலில் மெய் வந்திருக்கின்றதென்று சொல்கிறோம். இவ்விடயம் முன் (2-710, 749) விரிவாக உரைக்கப்பெற்றிருக்கின்றது.

க், ங் என்ற வரிசை மெய்கள் பதினெட்டு. இவைகளில் க் ச் ட் த் ப் ற் என்ற வல்லினமெய்கள் ஆறும், ங் என்ற மெல்லின மெய் ஒன்றும் ஆக இந்த ஏழு மெய்யெழுத்துக்கள் தமிழ் வழக்கில் மொழிக்கு இறுதியில் வரா. எனவே மொழிக்கு இறுதியில் வரக்கூடிய மெய்யெழுத்துக்கள் ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் இப்பதினொன்றே. இவைகளிலும் ஞ் ந் வ், என்னும் இம்மூன்று எழுத்துக்களை இறுதியில் உடைய சொற்கள் மிக அருமை:—(உரிஞ் - உராய்தல் வெரிந் - முதுகு, தெவ் - பகை).

ய் ர் ழ் என்ற மூன்று மெய்யெழுத்துக்களையும் ஈற்றிலுடைய சொற்கள் உயிரீற்றுச் சொற்களை ஒப்ப நின்று வருமொழிமுதல் வல்லினமெய் புணர்வதால் (3-176) அவைகளுக்குரிய விதிகள் முன்னரே கூறி முடியலாயின.

இனி, மொழிக்கு முதலில் வரக்கூடிய மெய்யெழுத்துக்கள் க் ச் த் ந் ப் ம் வ் ய் ஞ் ங், என்னுமிப் பத்தே. ட் ற் ண் ன் ழ் ல் ள் ர், என்ற இம்மெய்களோடு சேர்ந்து ஆன உயிர்மெய் எழுத்து ஒன்றும் மொழிக்கு முதலில் வராது. மொழிக்கு முதலில் வரக்கூடிய மெய்யெழுத்துக்களில், க ச த ப, என்னும் நான்கும் வல்லினம்; ஞ ங ந ம என்னும் நான்கும் மெல்லினம்; ய வ என்னும் இரண்டும் இடையினம்.

மெய்யீற்றுப் புணர்ச்சியில், நிலைமொழியின் ஈற்றில் எந்த மெய்யெழுத்து இருக்கின்ற தென்பதையும், வருமொழிமுதலில் எந்த மெய் நிற்கின்ற தென்பதையும், நிலைமொழியும் வருமொழியும் என்ன தொடரா கின்றன என்பதையும் நோக்கி, விதிகளை உணர்ந்து கற்க வேண்டும்:—

A. வருமொழி முதலில் யகரமெய் வருதல்.

I நிலைமொழி யீற்றில் யகரமெய்யைத்தவிர வேறு எந்த மெய்யெழுத்து நிற்பினும், வருமொழிமுதலில் யகரமெய் வருமானால் அவை புணருங்கால், எல்லாத் தொடரிலும் இகரம் தோன்றலாம்.

உரிஞ் + யானை = உரிஞ் + இ + யானை = உரிஞியானை.
மண் + யானை = மண்ணியானை.
வெரிந் + யானை = வெரிநியானை.
நம் + யானை = நம்மியானை.
சொன்னேன் + யான் = சொன்னேனியான்.
புகர் + யானை = புகரியானை.
கல் + யானை = கல்லியானை
தெவ் + யாவன் = (தெவ் + வ் + இ + யாவன்) தெவ்வியாவன்.
புகழ் + யாது = புகழியாது.
வேள் + யாவன் = வேளியாவன்.

குறிப்பு:—(1) இன்னபடி இகரம் பெற்றுத்தான் புணரவேண்டும் என்ற நியதியில்லை. செய்யுள்களில் ஒவ்வோரிடங்களில் இவ்வாறு புணர்ந்து இகரம் தோன்றியிருக்கும். அப்பொழுது இவ்விதி நினைவிலிருந்தால் பதம்பிரிப்பது சுலபமாகும். உரைநடை வழக்கில், கல்யானை, மண்யானை, மகள்யாவள் என்று எழுதப்படுமேயன்றிக் கல்லியானை மண்ணியானை மகளியாவள் எனப் புணர்த்துவதில்லை.

(2) இந்த இகரம் வேறு, குற்றியலிகரம் வேறு நிலைமொழியின் ஈற்றில் குற்றியலுகரமும் வருமொழி முதலில் யகரமும் வருமாயின், அக்குற்றியலுகரங் கெட, ஒரு இகரந்தோன்றிக் குற்றியலுகரம்விட்டகன்ற மெய்யின்மேல் ஏறும் என்றும், இவ்விகரம் உயிர்க் குறிலிற்கு உரிய ஒரு மாத்திரையினின்று குறைந்து அரைமாத்திரை அளவே ஒலிக்கு மென்றும் முன் (3—70) கூறியிருக்கின்றோம். முரசு + யாது = முரசியாது. கோடு + யானை = கோட்டியானை. அவ்வாறின்றி, இங்கு வருமொழியில் யகரம்வர நிலைமொழி யீற்று மெய்யோடு புணருங்கால் தோன்றும் இந்த இகரம் ஒரு மாத்திரையேகொண்டொலிப்பதாகும். அத்து, இன், உ என்பனபோல், இந்தஇகரமும் ஒருசாரியை.

(II) நிலைமொழி யிறுதியிலும் யகரமெய்யே இருக்குமானால் வருமொழிமுதலில் யகரமெய் வர இகரம் தோன்றாது. நிலைமொழியீறு வருமொழிமுதல் ஆகிய ஈரிடத்தும் யகரமெய் வருமாயின் அவை புணரும் விதிகள் வருமாறு:—

(a) நிலைமொழி யகரமெய்யில் முடிகின்ற ஈரெழுத்துச் சொல்லாய், முதலெழுத்தும் குறிலாக இருக்க, வருமொழிமுதலும் யகரமெய்யாயின், நிலைமொழியும் வருமொழியும் எந்தத் தொடராயினும், யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணரும்.

பொய் + யாது = பொய்யாது.
மெய் + யாது = மெய்யாது.
மெய் + யாப்பு = மெய்யாப்பு.

(b) நிலைமொழி யீற்றிலுள்ள யகரமெய்க்கு அயலெழுத்துக் குறிலாகஅல்லாமல் நெடிலாக இருக்குமாயின், வருமொழி முதலில் யகரம் வர, நிலைமொழி யீற்றிலிருந்த யகரமெய்,—எல்லாத் தொடர்களிலும் கெட்டுவிடும்.

தாய் + யாவள் = தா + யாவள் = தாயாவள்.
நோய் + யானை = நோ + யானை = நோயானை.
கோநாய் + யாது = கோநாயாது.

குறிப்பு:—தனிக்குறிலைச் சாராத யகரத்தின்முன் யகரம் வரின் எத்தொடரிலும் நிலைமொழி யிறுதி யகரமெய் கெடும்; நிலைமொழி யீற்றுமெய் எதுவாயினும் வருமொழி முதலில் யகரமெய் வருமானால் இயல்பாகவேபுணரும்; என்றுகொள்ளலாம்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[515வது பக்கத் தொடர்ச்சி]

வகையினை யழிந்தபின் மொழிகளும் தெளியும்.

நெடிதுநாளவளொடும்பழகியுள பான்மையால் தன் தலைவியின் குணமனைத்தும் நன்கு தெரிந்தவக் கூனி, வெகுண்டனளேனும் மனமோ முற்றுந் தளர்ந்திலள். அறிவின் திறமையுஞ் சேராமல் உணர்வினால் மாத்திரம் ஒழுகுகின்ற கைகேசியைத் தன் சூழ்ச்சியால் நினைத்தபடி உய்த்திட இயலுமென்பதில் ஐயம் பெரிதொன்றும் எய்திலளாய்த் தந்திரம் சில செய்யத்தலைப்பட்டு,

தெழித்தன ளுரப்பினள் சிறுகண் டீயுக
விழித்தனள் வைதனள் வெய்து யிர்த்தனள்
அழித்தன ளழுதன ளம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தையக் கொடிய கூனியே

[அந்தக் கொடிய கூனியானவள், இரைந்து கூவினாள், அதட்டினாள், தன் சிறிய கண்கள் தீச்சொரிய விழித்தாள், திட்டினாள், வெப்பமாக மூச்சுவிட்டாள், கைகேசி கொடுத்த மாலையைப் பிய்த்தனள், அழுதனள், அந்த அழகிய பொன்மாலையைத் தரைகுழியாகும்படி விட்டெறிந்தாள்]

கோபம் பாதி என்றால் இதனில், நாடகக்கோலம் பாதியாக இருத்தல் வேண்டும். முரஞ்சியூர் முடிநாகராயர் மொழிப்படி, "தீ முரணிய நீரும்" இம்மந்தரை கண்களினின்று வந்தது. தான் இயம்பியவுடன் கைகேசி இராமனைக் கெடுத்தொழிக்க இணங்குவாளென்று மந்தரை யொருபோதும் எண்ணியிராள் என்பது திண்ணம். முயற்சிபெரிது வேண்டுமென முன்னரே உணர்ந்துள அம் மந்தரை வேதனையும் வெகுளியுங் கூட்டி,

பேதைநீ பேதின்றிப் பிறந்த சேயொடு
மாதுயர் படுகநா னெடிதுன் மாற்றவ
டாதியர்க் காட்செயத் தரிக்கி லேனென்றாள்

[அறிவுகெட்ட நீ, வேற்றுமை நினைவில்லாமல், நீபெற்ற மகனாகிய பாதனோடும் பெருந் துன்பம் அடைவாயாக. நானோ உன் சக்களத்தியின் தாதியர்களுக்கு ஏவல்செய்யச் சம்மதிக்கமாட்டேன்]

என்று தன் சூழ்ச்சியைத் தொடங்குகின்றாள். அறிவினால் ஆற்றல் சாலா உள்ளத்தை எளிதில் கெடுக்க வல்லது அவ்வியம். உலகவியலில் இவ்வவ்வியத்திற்கு ஏற்றதோர் இலக்காய் நிற்கின்றது மாற்றவள் என்னுஞ் சொல். ஆதலிற் கூனி அதனைக் குறங்கெனப் பற்றிக்கொண்டனள். "நீ யுன் மாற்றவட் காள்செயத் தரிக்குமொரு பேதையாய் முடியினும்,யானோ, அவள் தாதியர்க்கடிமையா யமையமாட்டேன்" என விளம்பினாள். பின்னரிப் பொறாமையோ ருருப்பெற் றவள்கண்களின்முன் தோன்றுமாறு,

செவந்தவாய்ச் சீதையுங் கரிய செம்மலும்
நிவந்தவா சனத்தினி திருப்ப நின்மகன்
அவந்தனாய் வெறுநிலத் திருக்க லானபோ
துவந்தவா றென்னிதற் குறுதி யாதென்றாள்

[சிவந்த வாயையுடைய சீதையும் கருநிறம்பொருந்திய இராமனும் உயர்ந்த சிம்மாதனத்தில் வீற்றிருப்ப, உன்மகன் கதியற்றவனாய் வெறும் தரையில் கிடக்கும்படி ஆனபின் .....இந்நிலைக்குநீ விரும்புவதன் காரணம் என்ன? இதனால் நினக்கு வரக்கூடிய நன்மை யாது? என்றாள்]

கைகேயிக்கும் அவள் மகனுக்கும் எய்துதற்கியன்ற தாழ்மையை இவ்வாறு குறித்தபின் கூனி, இராமனும் கோசலையும் பெறுதற் கிருக்குஞ் சிறப்பினை மீண்டும் புகல்வாளாகி,

மறந்திலள் கோசலை யுறுதி மைந்தனுஞ்
சிறந்தநற் றிருவினிற் றிருவு மெய்தினா
னிறந்தில னிருந்தன னென்செய் தாற்றுவான்
பிறந்திலன் பரதனீ பெற்றதா லென்றாள்

[கோசலை தன்னுடைய நன்மையை மறவாது தேடிக் கொண்டனள். அவள் மைந்தனும் செல்வத்திலெல்லாம் சிறந்த செல்வமாகிய அரசசெல்வத்தை எய்தினான். இதன் பின் பாதன் எதற்காகச் சாகாமல் உயிர்வைத்துக்கொண்டிருக்க வேண்டுமோ தெரியவில்லை. நீ பெற்றதால் அவன் பிறவாதவனுக்கே நிகராகின்றான் என்றாள்]

வாக்கியங்களோ கூனியின் வாயில் வகைப்பட்டு வரவில்லை. இன்னது சொல்லவேண்டு மென்பது அவளுக்கு இன்னும் மனத்தில் தெளிபவில்லையாகையால் இவள் சொல்லவருவன துவக்குவதுவொன்றும் தொடர்வதுவொன்றும் முடிவதுவொன்றுமாய் நிகழ்கின்றன. "அவந்தனாய் வெறுநிலத் திருக்கலானபோது" என்னும் வாக்கியம் இடையிலே இற, "உவந்தவாறென்னிதற் குறுதியாது" என வினவுவாள். "இறந்திலன், இருந்தனன், பிறந்திலன்" எனச் சில சொற்களை முரணுற மொழிவாள். இம்முரணில் ஏதோ பெரும் புதைபொருள் இருப்பதுபோல் தோன்றுவதெல்லாம் வம்பே. கலகலவெனப் பலபட இரையவேண்டும் என்ற எண்ணமல்லால் கருத்தின் வரன்முறை அவள் மனத்தின்கண் தெளிந்திலாத் தன்மையையே இம்மொழிகளின் குழப்பம் காட்டுகின்றது. இதனைமறந்து பொருள்செய்யப் பார்ப்பார் முயற்சியின் அளவையும் பயனையும் இவ்விரு செய்யுள்களுக்கும் ஏற்பட்டுள்ள பல்வேறு பாடபேதங்களிற் காணலாம். இதன்பின்,

சரதமிப் புவியெலாந் தம்பி யோடுமிவ்
வரதனே காக்குமேல் வரம்பில் காலமும்
பரதனு மிளவலும் பதியி னீங்கிப்போய்
விரதமா தவஞ்செய விடுத லன்றென்றாள்

[நிச்சயமாக இந்த உலகையெல்லாம் தம்பியோடு கூடி அந்த இராமனே காப்பதாயிருந்தால், அளவில்லாத காலமும், பரதனும் அவன் தம்பி சத்துருக்கினனும் இந்நகரத்தைவிட்டுப்போய் விரதங்களோடுகூடிய சிறந்த தவங்களைச் செய்யும்படி விடுதலே நல்லது, என்றாள்]

பரதன் பிறவாதிருத்தலே நலமென்றாள்; இறத்தலே நலம் என்றாள், தவம் செய்தலே நலம் என்றாள். பின்னரும் அக்கூனி,

பண்ணுறு கடகரிப் பரதன் பார்மகள்
கண்ணுறு கவினரா யினிது காத்தவம்
மண்ணுறு முரசுடை மன்னர் மாலையில்
எண்ணுறப் பிறந்தில னிறத்த னன்றென்றாள்.

[கல்லணை பொருந்திய மதயானைகளையுடைய பரதன், பூமிதேவியின் கண்களுக்கு ஏற்ற அழகுடையவராய் இனிது காத்த, மார்ச்சனையுடைய முரசுகளையுடைய அந்த மன்னர் வரிசையில் ஒருவனாகக் கணக்கிடும்படி பிறவாதவனானான்- ஆதலால் அவன் இறத்தலே நலம், என்றாள்]

ஒன்றினைக்குறித்து உறவுறக் கூறுதற்கு இன்னமும் இக்கூனிக்கு யாதும் தென்படவில்லை. "சரதம் இப்புவி" யென்றும், "வரம்பில் காலமும்" என்றும், "பண்ணுறு கடகரிப்பரதன்" என்றும் பயனிற் சொற்களில் குழம்புகின்றனள். அல்லது பெருமையே பயின்றுபயின்று கனிந்த மனமும்மொழியும் வாய்ந்த கம்பரே சிறியன சிந்திக்கவும் ஆற்றாராய், இக்கீழ்க் குணக் கூனிக் குரியவாய புல்லியவுரை யாது சொல்விப்பதென வருந்தினார்போலும். முன் இக்காண்டத்து முதற்செய்யுளில்,

மண்ணுறு முரசின மழையி னார்ப்புறப்
பண்ணுறு படர்சினப் பருமயானையான்
கண்ணுறு கவரியின் கற்றை சுற்றுற
எண்ணுறு சூழ்ச்சியி னிருக்கை யெய்தினான்

என அமைந்துள எதுகைச் சொற்கள் நான்குமே மீண்டு மிங்கு எதுகைப்பட வந்தன. "முத்தினன் முழுநிலை வெறிப்ப மொய்ம்மணிப்பத்தியால் இளவெயில் பரப்ப" என்னு மிவ்விரு அடிகள் பாலகாண்டத்திலும் இவ்வயோத்தியா காண்டத்திலும் வந்தனவேனும், அவ்வடிகளின் ஓசைநயம் தயங்குமுள்ளத்தால் கம்பர் தன்னையறியாமலே இவ்வண்ணம் இருமுறை பாடிவிட்டார் என் றியம்புதல் கூடும். இவ்விதமே, "வீடின ராக்கரென் றுவக்கும் விம்மலால்" என்ற அடியே திருவவதாரப் படலத்தின்கண் இருமுறை வந்திருப்பதும், "புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்கவன்" என்ற சொற்றொடர்களாலேயே, திருவவதாரப் படலத்திலும் கும்பகருணப் படலத்திலும்சிபிசக்ரவர்த்தியைக் குறிப்பதும் அச்சொற்களின் நயத்திலின்று நீங்காத உள்ளத்தினது கிளர்ச்சியெனக் கூறலாம். மற்று, பண்ணும் கண்ணும் மண்ணும் எண்ணும் மீண்டுமீண்டும் இரண்டு செய்யுள்களில் எதுகையாவதற்கு அத்தகைய காரணமொன்றுமில்லை. கூனியின் குழப்பத்தைக் கம்பர் தானுமே பகிர்ந்துகொண்டு இங்குச் சொற்களை நாடிச் சிறிது சோர்தலுற்றார்போலும்.

ஓயாது வாயாடினால் உறுபொருள் ஒன்றிரண்டு வாராமற் றீராதென்னுமிது வழக்கே. எழுந்த சொற்களை இதுகாறும் இழுத்திழுத்த கூனிக்குமிப்பொ

முழுது குறிக்கொண் டெய்வதற்குரிய இலக்கொன்று தென்பட,

> பாக்கியம் புரிந்திலாப் பரதன் றன்னைப்பண்
> டாக்கிய பொலங்கழ லரச னாணையால்
> தேக்குயர் கல்லதர் கடிது சேணிடைப்
> போக்கிய பொருளெனக் கின்று போந்ததால்

[பாக்கியம் செய்திராத பரதனை, பொன்னாற்செய்த வீரக் கழலையணிந்த வரசன், முன், தன் கட்டளையினால், தேக்கு மரங்கள் உயர்ந்த மலைவழியாக, விரைந்து அனுப்பிவிட்ட தன் கருத்து எனக்கு இப்பொழுது அன்றோ தெரியவருகின்றது]

எனச் சாற்றினாள். கூரிய கருத்தொன்று நோக்கதேனும் அதனைக் கழறும்வகை இன்னும் அவளுக்குத் தெளியவில்லை ஆக்கிய வென்றும் தேக்குயர் என்றும் எதுகைக்கன்றி வேறோர் பயனிலாப்பதங்கள் வருகின்றன. எழுந்த மொழிகள்தாம் இவ்வாறு உழுன்றனவாயினும் கூனியின் சூழ்ச்சியோ சிறிதன்று. விரிவாக விளம்புவதைக் காட்டிலும் குறிப்பொன்று போக்கிக் குறைபட நிற்பதே வேகம் மிகவுடைத்து. பரதனை வேந்தன் சேணிடைப் போக்கியபொருள் அவளுக்கு அன்றுதான் உதித்திட, கள்ளமோ சிறிதுமிலா உள்ளமுடைய கைகேசி எப்பொரு ளிதுவென எங்ஙனம் உணருவாள். உணர்ந்தபின் கொள்வாளோ அல்லளோவென குனிப்பதன்முன் இச்சொல்லின் மறைபொருள் யாதெனத் தெரிதற்கவாவும் அவள் மனம். அவ்வவாவினை யெழுப்பிவிட்டுச் "சூழ்ச்சியே இனி நீயுன் வேலையைச் செய்" என்று களிக்கின்றாள் இக்கயத்தி, இவ்வாசகத்தை இதனோடு நிறுத்திக்கொண்டு வேறு சில விளம்பப் புகுகின்றாள். இதுகாறும், தன் கருத்தை முடித்துக்கொளற்குரிய கருமமும், அக்கருமத்தைக் குறிப்பதற்கு ஏற்ற சொற்களுந் தேற்றுத மந்தரை இதன்மேல் செயல்வகை தெளிந்த மனத்தவளாயினாள். இவள் தன்கருமத்தை எண்ணித் துணிந்தவளல்லள். துணிந்தபின் எண்ணுவம் என்றே துவக்கினாள். இப்படித் துவக்குவதற்கு உரித்தாய மயக்கம் சிறிதுநேரம் இருந்தது. பின்னர் இக்கொடியதோர் கருத்து எற்றலும் மயக்கந் தெளிந்தாளாகி மேலே சில விளம்பலுற்றாள்.

இவ்வாறிவள் வகையறியாதிருந்து இதுகாறு முழன்றுளென்றும், இதன்மேல் செயல்வகை தெளிந்து கொண்டன ளென்றும் குறிக்கவே, இக்கூனியின் மொழிகளுக்கிடையே கம்பர், "மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்" எனத் தன் கூற்றைச் செருகிப் பிரிக்கலாயினர் என்று எண்ணவேண்டும். இதற்கு முன் சென்ற கூனியின் சொற்களைப்போ லல்லாமல் வகைந்து கூறத்தலைப்பட்ட இதனிற்குமேல் அவள் மனம்போல் சொற்களும் கலங்கலின்றி ஒன்றையொன்று முறையே தொடர்ந்து செறிவுடன் நடக்கக் காணலாம். இன்னபடி,

> மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்
> அந்தரந் தீர்ந்துல களிக்கு நீரினால்
> தந்தையுங் கொடியனற் றாயுந் தீயளால்
> எந்தையே பரதனே யென்செய்வா யென்றாள்.

[வகைப்படுத்தி மேலும் கூறுவானாகி மந்தரை, "பெருமைநீங்கி அரசினை ஒருவனுக்கே கொடுக்குந் தன்மையினால் தகப்பனும் கொடியவன். அதனைத் தடுக்காது உடன்படுவதால் உன்னைப் பெற்ற தாயும் கொடியவள். என்னப்பா, பரதனே இனி நீ என்ன செய்வாயோ" என்றாள்.]

சேணிடைச்சென்றுள பரதனைச்சிந்தித்துப் புலம்புகின்ற கூனி நன்று நடிக்கின்றாள். இனி அண்மையாய கைகேசியை நோக்கி,

> அரசரிற் பிறந்துபின் னரச ரில்வளர்ந்
> தரசரிற் புகுந்துபே ரரசி யானநீ
> கரைசெயற் கருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய்
> உரைசெயக் கேட்கிலை யுணர்தியோ வென்றாள்

["அரசர்மனையில் பிறந்து, பின் அரசர்மனையில் வளர்ந்து, பின் அரசர்வீட்டில் வாழ்க்கைப்பட்டுப் பெரிய அரசியான நீ, கரையில்லாத் துயரக்கடலில் விழப்போகின்றாய். நான் சொன்னாலும் கேட்கவில்லை—(நான் சொல்லுவது உன் காதிலாவது படுகின்றதோ)-உனக்கு ஸ்மரணை இருக்கின்றதா," என்றாள்]

கைகேசிக்கு வரவிருந்த தாழ்மையையும் துயரையும் மந்தரை ஓதுங்கால் அச்சொற்களைக் கேட்குங்குறி அவள்முகத்தில் தோன்றாததால், 'உணர்தியோ' வென வெறுத்து, மறுபடி தன் மனத்தினைப் பரதன்பால் செலுத்துகின்றாள். செலுத்தி,

> கல்வியு மிளமையுங் கணக்கி லாற்றலும்
> வல்வினை யுரிமையு மழகும் வீரமும்
> எல்லையில் குணங்களும் பரதற் கேயது
> புல்லிடை யுகுத்தமு தேயும் போலென்றாள்

[கல்வியும், இளமையும், அளவில்லாத வல்லமையும், வில்வித்தைத் திறமையும் அழகும் வீரமும் எல்லையில்லா நல்ல குணங்களும் பரதனுக்கே இருக்கின்றன. இந்நலங்களின் திரண்ட பயனனது, புல்லில் சிந்திய அமிர்தம் போல் வீணாகின்றது]

எனக் கையறுநிலையிற் கதறினாள். தன் உரையை இடையிடை மறுத்து ஏதேனுங் கைகேசி எதிருரைத்திருந்தாளாயின் வேறுவேறாகிப் பேசுந் திறங் கூனிக்கு வாய்த்திருக்கும். அவ்வாறின்றித் தான் உரைக்கும் மொழிகள்தாம் இவள் செவியிற் பட்டவோ இல்லையோ என்றையுறும்படி இறுகின்ற கைகேசியின் முகக்குறி கூனிக்கு ஊக்கம் கொடுத்திராதாதலின் ஒன்றினையே மீண்டும்மீண்டும் பலபடப் பகர்வதல்லால் புதியன வருதற்கொத்த வாய் அவள் பெற்றிலள். பரதனைக் கடிது சேணிடை மன்னன் போக்கியதில் ஓர் பொருளுளதென இங்கிதம் ஏவியதொன்றே சற்றுத் திறமையுடையது. மற்று இதனில் எத்தூரம் உண்மையுளதென்று ஓர்தல் வேண்டும். அற்றைநாள் பரதன், கேகயநகரில் வைகுவது உண்மையே. ஆயினும் தயரதன் அவனைக் கடிதுபோக்கினான் என்பதும், அவ்வாறு போக்கியதும் பரதனை அகற்றிவைத்து இராமனுக்கு முடிசூட்ட வேண்டும் என்னும் சூழ்ச்சியால் செய்தனன் என்பதும் இயலுமோ என்பதைக் கம்பர்கருத்தையும் வான்மீகர்வழியையும் பின்பற்றி ஆயுங்காலையில் வேறுவேறு முடிவிற்கு வரவேண்டி நேர்கின்றது. மாசறு தூய்மைவாய்ந்த தயரதன் பரதனது அற்றம் நோக்கியே தன் முதல்மணிப் புதல்வனுக்கு முடிசூட்டவேண்டுமென்று நினைப்பதென் காரணம், அக்காரணந்தான் ஒன்றுளதாயின் கூனி அதனை உணர்ந்தவா றெவ்வாறு, அனைய கேள்விகள் எழாமலொழிவ தியற்கையன்று. இவைகளை ஆயுமுன், இனிக்குங் கைகேசிக்கு மிடையே நடந்த உரை சில கூனனுந் தெரியவேண்டுவ தின்றியமையாதாதலால் சிறிதுபின்னர் இதனைச் சிந்தித்தல் நலமாம்.

ஒட்டக்கூத்தர் பாடிய

தக்கயாகப் பரணி

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரியநூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா.12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

Estd. **NATIONAL** 1906
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-9, Old Court House St., Calcutta.

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over **Rs. 1,47,000,00**

Prompt settlement of Claims. Claims paid exceed **Rs. 67,000,00**

IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply tothe Company to-day.

R. G. DAS & Co, OR **K. S. GOPALAYYA**
Managers. *Branch Secretary, Loane Square, Broadway, Madras.*

ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK
BY
Mudaliar C. RASANAYAGAM, C. C. S.
With a ForeWord By
Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. **V. P. Charge Extra.**

MANAGER:—
KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஓயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

வர்த்தமானம்

ஸிம்லாவில் கவர்னர்மஹாநாடுகூட்டுவதற்கு, லார்ட் இர்வின் எல்லா மாகாண கவர்னர்களையும் அழைத்துள்ளார். ஜூலைமாதம் 21, 22 தேதிகளில் மஹாநாடு கூடுமென்றும், வருங்கால இந்திய வரசியல் விஷயமாய்ப் பேசப்படும் என்றும் தெரிகின்றது.

***

பெஷாவரில் நடந்த கலவரத்தைப்பற்றி விசாரணை செய்யும்பொருட்டு இந்திய வரசாங்கத்தால் நியமிக்கப்பெற்ற சுலைமான் கமிட்டியார் விசாரணையை முடித்துவிட்டனர் என்றும், அக்கமிட்டியின் முடிவும், அதன்மேல் அரசாங்கத்தார் அறிக்கையும் சீக்கிரத்தில் வெளிவரும் என்றும் தெரிகின்றது.

***

சென்னைச் சர்வகலாசாலை ஸிண்டிகேட் சபையார் தமிழ் அகராதி வேலைச்சபையின் துணைஆசிரியரான ஸ்ரீமான் பி. எஸ் சுப்பிரமணிய சாஸ்த்திரி அவர்களுக்கு டாக்டர் பட்டம் அளிக்கத் தீர்மானித்துள்ளனர். ஸ்ரீமான் சாஸ்திரியார் செய்த தமிழ் இலக்கண ஆரர்ய்ச்சிக்காக இப்பட்டம் வழங்கலாகின்றதெனத் தெரிகின்றது.

***

டில்லியில் அரசியல் வாதிகள் வரிகொடாதிருக்கும்படி ஜனங்களைத் தூண்டுவதைத் தடுக்குமாறு பிரயோகிக்கப்பட்ட அவசரச்சட்டத்தின்படி ஜூலை மாதம் 4ந்தேதி யன்று 9 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும், இச்சட்டத்தின் கீழ் இதுவரை 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் டில்லிச் செய்தி கூறுகின்றது.

***

சென்னைத்தங்கசாலை வீதியில் கிரௌன்தியேட்டருக் கடுத்தாற்போலிருக்கும் விநயகப்பெருமானுடைய ஆலயத்தைப் புதுப்பித்து, அதற்கு மஹா கும்பாபிஷேகம், இந்நகர் பிரபல வியாபாரியான ஸ்ரீமான் பழனியாண்டிபிள்ளையின் குமாரர்களால்நடத்தப்பெற்றது என்று ஒரு நிருபர் அறிவிக்கின்றார்.

***

இப்பொழுது இந்தியாவில் கையாளப்படும் அடக்கு முறையைக் கண்டிக்கும்பொருட்டுப் பம்பாய் மருந்துவியாபாரிகள் மூன்றுமாத காலத்திற்குப் பிரிட்டிஷ் மருந்துசாமான் வாங்குவதில்லை யென்று தீர்மானம் செய்திருக்கின்றனர் எனப் பம்பாய்ச் செய்தி கூறுகின்றது.

கல்கத்தாவிலும், அஸ்ஸாமில் சிலவிடங்களிலும் பூகம்ப அதிர்ச்சி சென்ற வியாழன் அன்று ஏற்பட்டதென்றும், பிறகு சனியன்று மறுபடியும் சிறிது பூகம்ப அதிர்ச்சி யேற்பட்ட தென்றும் தெரியவருகின்றது. இதனால் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் அதிகம். பல பொதுக்கட்டிடங்கள் பாழாயின வென்றும், தந்திப் போக்குவரவு நின்றுள்ளதென்றும் பலவிடங்களிலுள்ள 35பாலங்கள் சேதமாயின என்றும் தெரிகின்றன. இதுவரை இவ்வளவு பெரிய பூகம்பம் நிகழ்ந்ததில்லையாம்.

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

இயற்றிய செந்தமிழ் நூல்கள்

இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்

இஃதொரு சமரச சன்மார்க்க நூல். இராமலிங்க சுவாமிகள் ஷடாந்த சமரச சன்மார்க்கத்தில் நின்று, அருனெறியோம்பி, உயிர்கள் வழிபாடே கடவுள் வழிபாடு என்பதை யுணர்ந்து, சமயவாழ்வு நடாத்திய விதம், அவர் ஆண்டவனை நோக்கிச் செய்த முறையீடு, அழுத அழுகை, அவர் கொண்ட குரு, பொருணூல், வழிபடுகடவுள், அவரடைந்த மரணமிலாப் பெருவாழ்வு, அதற்குரிய முறை முதலியன தெளிவாக இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்நூல் காலத்துக்கேற்ற ஒன்று என்பது, நூலை முற்றும் வாசிப்போர்க்கு இனிது விளங்கும்.

விலை ரூபா 1

		ரூ.	அ.
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	...	2	8
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	...	2	0
தமிழ்த் தென்றல்	...	2	0
முருகன் அல்லது அழகு	...	1	0
சைவத் திறவு	...	0	8
என்கடன் பணிசெய்து கிடப்பதே	...	0	8
சைவத்தின் சமரசம்	...	0	8
கடவுள் காட்சியும் தாயுமானரும்	...	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம்	...	0	4

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஏககாலத்தில் வாங்குவோருக்குத் தபாற்செலவின்றி, மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.

B. V. பண்டிட் சத் வைத்தியசாலை, நஞ்சன்கூடு.

ஆயுர்வேத நஞ்சன்கூடு பல்பொடி வித்வான்

சோல் ஏஜண்ட்ஸ்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம், பால சுதர்
(Reg.)
அமிர்தாமலக தைலம்

டானிக்குகள்
சாவனப்பிராசா
திராக்ஷாபாக ஜீவஸுதா
(Reg.)
பாதாமி ரசாயனம்
பிருங்காமலக தைலம்

சோல் ஏஜண்ட்ஸ்:—
யுனைடட் கன்
ஸர்ன்ஸ்,

54,
பந்தர் தெரு,
சென்னை.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா	ரூபா	2 0 0
வெளிநாடு	,, ,,	2 8 0
தனிப்பிரதி விலை	அணா	0 4 0

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப் பெற்றது. தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

விலை ரூபா 4. தபால் செலவு வேறு.

EDUCATIONAL PUBLISHING CO.
Nungambakam, Madras.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனும்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம்	...	ரூ.	5.
அயோத்தியா காண்டம்		ரூ.	5.
ஆரண்ய காண்டம்	...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம்	...	ரூ.	4-8.
சுந்தர காண்டம்	...	ரூ.	5.

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—" கலா நிலயம் ",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)